773
1197

# மறு வாழ்வு

190

# மறு வாழ்வு

H92
151
A
34

எழுதியவர் :
சொ. அண்ணாமலை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி.க. சண்முகம்

சென்னை :
அரசாங்க செய்தித் துறை வெளியீடு

அவ்வை டி.கே. சண்முகம் அவர்கள்,
நூல் வரிசை எண்: 104
நன்கொடை எண்: 104

விலை 25 காசுகள்

மதுரை காமராசர்

சென்னை அரசாங்க அச்சுக்கூட சூப்பிரன்டென்டென்டாரால்
அச்சிடப்பெற்றது
1958

# நூன்முகம்

ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி மக்கள் அனைவரும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் சென்னை அரசாங்க செய்தித் துறை, அண்மையில் நாடகப் போட்டி ஒன்றை நடத்தியது. போட்டிக்குப் பல நாடகங்கள் வந்திருந்தன. அவற்றிலிருந்து, முதல் பரிசுக்கு உரியன வாக மூன்று நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் ஒன்றே "மறு வாழ்வு" என்னும் இந்த நாடகம். இதை எழுதியவர் இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரி வ. உ. சி. நாடக மன்ற உறுப்பினருள் ஒருவரான திரு. சொ. அண்ணாமலை ஆவார். ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களையும், சாதனைகளையும் உணர்த்துவதில் இந்த நாடகம் நன்கு பயன்படும் என்று நம்புகிறோம். இந் நாடகத்தை நடிக்க விரும்புவோர், சென்னை அரசாங்க செய்தித் துறை நெறியாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடிக்கவேண்டும்.

நெறியாளர்,
சென்னை அரசாங்க செய்தித்துறை.

# நாடக மாந்தர்

| | | |
|---|---|---|
| **வைத்தியலிங்கம்** | .. | விவசாயத் தொழிலாளி—ஐந்தாண்டுத் திட்டத்தினால் முன்னேற்றமடைந்தவர். |
| **செங்காரய்யா** | .. | ஒரு பணக்காரர். |
| **கந்தப்பன்** | .. | செங்காரய்யாவின் கார்வார். |
| **உபாத்தியாயர்** | .. | ஐந்தாண்டுத் திட்டத்தில் பற்றுள்ளவர். |
| **மன்னார்** | .. | காவேரியின் கணவர். |
| **காவேரி** | .. | வைத்தியலிங்கத்தின் தங்கை. |
| **தனம்** | .. | உபாத்தியாயரின் மகள். |
| **மாமுண்டி**<br>**இருளப்பன்**<br>**கத்தான்** | } | கிராமவாசிகள். |

மற்றும் டாக்டர், கிராமசேவக், போலீஸ், தரகர், முதலானோர்.

மதுரை காமராசர்

# மறு வாழ்வு

## நாடகம்

### காட்சி 1

**இடம் :** விவசாயக் கடனுதவி அலுவலகம்.

**நபர் 1 :** எஜமான் ! மாடு இல்லாம மூணு வருஷமா காட்டு வெள்ளாம கெட்டுப் போச்சு. நீங்க தான் . . .

**ஆபீஸர் :** இந்தாங்கய்யா எஜமான்னு கூப்பிடாதீங்க. உங்களுக்காக சர்க்காராலே ஏற்படுத்தப்பட்ட ஊழியர்கள் தான் நாங்க அய்யான்னு கூப்பிட்டால் போதும். உங்க மாதிரி ஏழை விவசாயிகளுக்காகத்தானே நம்ம அரசாங்கம் பெரிய திட்டம் போட்டு கடன் உதவி செய்ய முன் வந்திருக்கு. பிறகு எதுக்காக நீங்க கவலைப் பட்றீங்க....இந்தாய்யா இப்ப நாங் கொடுக்கிற பணத்தை உங்க சொந்த சிலவுக்கு உபயோகப் படுத்தாம விவசாயத்தை விருத்தி செய்யணும் தெரியுமா ?

**விவ :** சரியுங்க.

**ஆபீ :** உங்க பேர் . . . . (எழுதுகிறார்)

**விவ :** கோவிந்தசாமி.

**ஆபீ :** உங்க அப்பா பேரு.

**விவ :** ராமசாமி.

(எழுதுகிறார்)

**ஆபீ :** இந்த இடத்திலே கையெழுத்துப் போடுங்க.

(கையெழுத்துப் போட்டு ஆபீஸரிடம் பணம் பெற்றுக் கொண்டு விவசாயி போதல்.)

**மா.மு :** வணக்கமிங்க.

**ஆபீ :** உங்க பேரு.

**மா.மு. :** மாமுண்டி.

**ஆபீ :** உங்க பேரு லிஸ்ட்டிலே இல்லையே . . . ஆமா உங்களுக்கு சொந்த நிலமிருக்கா.

**மா.மு. :** கொஞ்சந்தான் ஒரு 15 காணி இருக்கு.

**ஆபீ :** உழவு மாடுகள் இருக்கா.

**மா.மு. :** ஒரு பத்து ஜோடி இருக்கு.

**ஆபீ :** உங்களுக்கு எதுக்கய்யா பணம் ?

**மா.மு. :** சர்க்கார்லே எல்லாத்துக்கும் கடன் கொடுக்கிறதா கேள்விப்பட்டு ஓடிவந்தேன். நான் கொஞ்சம் விஷயந் தெரிஞ்சவ பாருங்க.

**ஆபீ :** இந்தாய்யா. ஏழை விவசாயிகளுக்குத்தான் கடன் உதவி. உங்க மாதிரி விஷயந் தெரிஞ்சவங்களுக் கில்லே. போயிட்டு வாங்க.

(மாமுண்டி கனைத்துக்கொண்டு போய் நிற்கிறான்)

**வைத்தி :** வணக்கமிங்க.

**ஆபீ :** உங்க பேரு.

**வைத்தி :** வைத்தியலிங்கம்,

**ஆபீ :** தகப்பனார் பெயர்.

**வைத்தி :** தர்மலிங்கம்.

**ஆபீ :** கையெழுத்துப் போடுங்க.

(வைத்தி கையெழுத்துப் போடுகிறான் ஆபீஸர் பணத்தைக் கொடுத்துவிட்டு)

உங்களைப்பற்றி கிராம அதிகாரி சொன்னார். இந்தப் பணத்தை சொந்த செலவுக்கு உபயோகப்படுத்தாமே . . . விவசாயத்தை வளர்க்க உபயோகப்படுத்துவ தோடு மற்ற விவசாயிகளுக்கும் எடுத்துச் சொல்லுங்க. போயிட்டு வாங்க. இந்த உதவியைக் கொண்டு நல்ல முன்னேற்றம் காட்டினா அரசாங்கம் இன்னும் அநேக உதவிகளை உங்களைப்போன்ற விவசாயிகளுக்குச் செய்யும்.

**வைத்தி :** வணக்கமுங்க.

(வைத்தியலிங்கம் பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டே போகிறுன். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கார்வார் கனைத்துக்கொண்டு பின் தொடர்கிருர்.)

## காட்சி 2

**இடம் :** கிராமத்தின் தெரு.

**நிலே :** வைத்திலிங்கம் ஆனந்தமாகப்பாடிக் கொண்டு வருகிருன் : கார்வார் கந்தப்பன் எதிரே வருகிருன்.

**கார்வார்-கந்தப்பன் :**—என்னடாப்பா வைத்தி ! . . . . பாட்டும் படிப்பும் ஏக அமக்களாமாயிருக்கு. குடிக்கக் கூழிருந்தா . . . . கோழி கூப்பிடப் பாட்டு வருமாம். . .

**ஸவத்திலிங்கம் :** அப்படி யொண்ணுமில்லிங்க. . . என்னமோ . . . இன்னேக்கிச் சந்தோஷமா. .

**கா. கந்த :** எண்டாயிருக்காது சந்தோஷம். . . கொடுத்தவன் கேக்கா மெ . . . யிருந்தா . . . கொண்டாட்டந்தானே. இந்தக்காலத்திலே " அய்யோன்னு " எரக்கப்பட்டா, அவன் தலேயிலே தானே மொளகாய் அரைக்கிறீங்க.

**வைத்தி :** அய்யய்யோ பாவமே. அப்படி யெல்லாம் நெனேக்காதீங்க. ஏதோ . . . போதாத காலம் வெள்ளாம வெளச்சலும் மோசம் பண்ணிப்பிடுச்சு. சாமி புண்ணியத்திலே இந்த வருஷம் பொழைச்சிருந்தா எப்பிடியும் தந்திடுரேனுங்க.

**கந்தப்பன் :** ஓகோ ! . . . அதுவும் பொழச்சிருந்தா தாரீயோ. நீ செத்தாலும் விட மாட்டேண்டா, விட மாட்டேன். இந்தக் கந்தப்பனே என்னனுடா நெனேச்சே . . . இல்லே கேக்கிறேன். இண்ணேக்கி ஒங்கிட்டே யிருந்து பைசாவாவது வசூலு பண்ணிக்கிட்டு போகலே . . எம் பேரை மாத்தி வச்சுக் கூப்பிடு. காருவாரு கந்தப்பன் வர்ராருன்னு கண்ணுக்குட்டி கூட " மா "ன்னு கத்தாதிடா. குடிச்ச பாலேக் கூடக்கக்க வைப்பேண்டா. டேய் வைத்தி ! . . . இந்தப்பாரு

இன்னைக்கி எங்கிட்டேயிருந்து தப்ப முடியாது. ஒழுங்காப் பணத்தை எடுக்கிறியா என்ன சொல்றே . . .

**வைத்தி :** நின்னுப்பிலே நிக்க இன்னைக்கி எங்கங்க போவேன் பணத்துக்கு.

**கந்தப்பன் :** யார்ட்டேடா கயிறு திரிக்கிறே . . . நாந் திரிச்ச கயத்துக்கு தலைப்புத் தெரியாமெ யிருக்கிறப்போ . . . எங்கிட்டேயே கயிறு திரிக்கிறியே . . . . . ஒழுங்கா மடியை . . அவுக்கலே . அப்புறம் நரன மனுஷனாயிருக்கமாட்டேன். நேத்துத்தான் சொளை சொளையா வாங்கினதை என் கண்ணுலே பாத்தேன்.

**வைத்தி :** அதுங்களா . . . . தேசீய அபிவிருத்தித் திட்டத்திலிருந்து உழவு மாடு வாங்க பணந்தந்தாங்க.

**கந்த :** எதுவா இருந்தா எனக்கு என்னடா. பணந்தானே அது. நீ மாடு வாங்கின யென்ன மண்ணுப்போன யெனக்கென்ன ?

**வைத்தி :** என்னங்க ஏதோ இல்லாதவங்களுக்குக் கடன் கொடுக்கிறுங்க. மாடுவாங்கிறதுக்குன்னு கொடுக்கிற பணத்தை சொந்தக் கடனுக்குக் கொடுக்கிறது நல்லாயிருக்குங்களா. மாடு இல்லாமெ எப்படிங்க ஒழைக்க முடியும். ஒழைச்சாத்தானுங்களே கடனையும் கட்ட முடியும்.

**கந்த :** அதைப் பத்தி எனக்கு என்னடா.

**வை :** சர்க்கார் கேட்டா என்னங்க சொல்வேன்.

**கந்த :** அதைப்பத்தித்தான் அக்கரையில்லேன்னுட்டேனே.

**வை :** அய்யா ! . . . . கொஞ்சங் கோவமில்லாமே பேசுங்கய்யா. கை ரெண்டையும் வெட்டிப்பிட்டு கலப்பையை புடி டான்னு முடியுங்களா. மாடில்லாமெ வெள்ளாமைசெஞ்சு பொளைக்க முடியாதுங்க. இந்தவருஷம் எப்படியும் கடனை அடைச்சிடுறேன். கிராமங்கள்லாம் முன்னேற வேணுமின்னு சர்க்கார் ஒதவி செய்யுது. நீங்களும் மனசு வைங்க புண்ணியமாப் போகும்.

**கந்த :** அந்த பாவலா யெல்லாம் எங்கிட்ட நடக்காது.

**வை :** நடக்காதின்னு . . . . இப்ப பணமில்லீங்க. வேணுமின்னு நானே வந்து எஜமாங்கிட்டே சொல்லிக்கிறேங்க . . .

**கந்த :** நான் கேட்கிறேன். எஜமாங்கிட்டே சொல்லிக்கிறியா.

**வைத்தி :** ஆமா ! நான் ஒங்ககிட்ட வாங்கலியே. எஜமாங்கிட்டே வாங்கினேன், அவங்ககிட்டேயே கொடுத்திடுறேன்.

**கந்த :** எண்டா கொழுத்தா போச்சு . . ஒகோன்னும் . . . எங்கே பாப்போம் ஒஞ்சமத்தை (மடியைப் பிடித்துக் கொண்டு) எடுடா பணத்தை ! எடு.

**வை :** மடியைப் பிடிக்காதிங்க.

**கந் :** என்னடா பண்ணுவே (சச்சரவாகவும் உபாத்தியாயர் வருதல்).

**உபா :** நில்லுங்க . . . . . நில்லுங்க என்னப்பாயிது ரோட்லே . . .

**வை :** வாங்கையா வாங்க நீங்களே வந்து சொல்லுங்க.

**உபா :** என்ன ? . . . என்ன நடந்தது. அவன் மடியை விடய்யா முதல்லே . . . எஞ்சண்டை போடுறீங்க.

**கந் :** சண்டை யென்னய்யா சண்டை இந்தக் கடங் காரனோடே. வாங்கின கடனைக் கொடுக்க முடியாட்டியும் சட்டமில்ல பேசுராரு, சட்டம் ! . . . இன்னைக்கி, அவன். இல்லாட்டி நான், ரெண்டிலே ஒண்ணு பாத்துப்பிட்டுத் தான் போறது.

**உபா :** நில்லப்பா. என்ன நடந்தது.

**வைத்தி :** செங்காரையா கிட்டே கடன் வாங்கியிருந்தேங்க.

**கந்த :** எத்தினி வருஷமிடா ஆச்சு.

**உபா :** கொஞ்சம் பொறுங்கையா . . . நீங்க யாரு.

**கந் :** செங்காரையா வீட்டுக் காருவாரு.

**உபா :** அப்படியா . . . சரி . . . நீ சொல்லப்பா.

**வை :** அதுங்க . . அந்த வருஷம் வெளையாததினலே கடனைக் கொடுக்க முடியலே . .

**உபா :** அதுதான் தெரியுதே, இப்ப என்ன நடந்தது

**வை :** தேசீய அபிவிருத்தித் திட்டத்திலேயிருந்து கொஞ்சம் பணங் கெடச்சுதுங்க

**உபா :** எதற்காக ?

**வை :** மாடு வாங்க. அதைத் தந்திடுன்னு தான் சண்டை போடுராரு.

**உபா :** மாடு வாங்க சர்க்கார் கொடுத்த பணத்தையா ? சேச்சே . . இது ரொம்ப தப்பானது. அய்யா . . காரு வாரய்யா—மாடுவாங்க சர்க்கார் கொடுத்த பணத்தை நீங்க கேட்பது முறையில்லீங்க. விவசாயிகளுடைய வறுமையைப் போக்கவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமாக, என்னென்ன செய்யலாமோ அவைகளை அக்கரையோடு பார்த்து வருகிருர்கள். 100-க்கு 80 பேர் விவசாயிகளாயிருப்பதால், விவசாயிகளின் வாழ்வில் தான் நாட்டின் சுபிட்சம் எதிரொலிக்கும். இதற்காகத் தான் விவசாயிகளின் முதல் தேவையான உரம், பொறுக்கு விதை, உழவு மாடு, பயிர்களைக் கெடுக்கும் பூச்சிகளுக்கு மருந்து, விவசாயம் அதிகப்படியான முன்னேற்றமடைவதற்கான பயிற்சியும் ஆலோசனையும் தந்து நமது கிராமத்தின் முன்னேற்றத்தை நாளுக்கு நாள் கணக்கெடுத்து வருகிருர்கள். . . . ஆகையால் விவசாயிகளுக்குக் கடனுகக் கிடைத்த பணத்தை குறிப்பிட்ட விவசாய தேவைகளுக்கு மாத்திரம் செலவு செய்வது தான் நேர்மையானது. விவசாயக் கடனை துர்ப்பிரயோகம் செய்வதைப் போன்ற தேசத்துரோகத்தை நாம் செய்யவே கூடாது.

**கந்தப்பன் :** வாத்தியாரையா. இந்தப் பாடத்தைப் பள்ளிக் கூடத்துப் பிள்ளைங்கிட்ட படிங்க இது பண விஷயத்துக்கு ஒத்து வராதுங்க. இந்த விஷயத்திலே யெல்லாம் நீங்க தலையிடாதீங்க . . . அப்புறம் நான் நல்லவனில்லே.

(செங்காரம்பலம் வருதல்.)

**செங்காரு :** என்னடா கந்தப்பா என்ன இறைச்சல்.

**உபாத்தியாயர் :** வாங்கய்யா நல்ல சமயத்திலே வந்தீங்க.

**செங்காரு :** ஆமங்க . . . என்ன சண்டை . . .

**கந்தப்பன் :** (வைத்திலிங்கத்தைச் சுட்டிக் காட்டி) அந்தப் பய . . . பணம் வச்சிருக்கப்போ கேட்டா . . வலிக்குதாம் . . . மூட்டை யடிக்கிற பயக.

**செங் :** யாரு வைத்தியா. ஏண்டா வைத்தி இருக்கிறப்ப கொடுத்தா யென்னடா எத்தினி நாளாச்சு ?

**உபாத் :** செங்காரையா . . . கொஞ்சம் கோபிச் சுக்கப் பிடாது. உங்க புண்ணியத்திலே இன்னைக்கு எத்தனை யோ ஏழைங்க பிழைக்கிறாங்க . . . . .

**கந்தப்பன் :** அது நாலெ தானே கொழைச்சுப் போடு ராங்க.

**உபாத்தியாயர் :** நீங்க கொஞ்சம் சும்மாயிருங்கையா . . செங்கரரையா ! . . . . . .வைத்திலிங்கம் மாடு வாங்க சர்க்காரிடமிருந்து கடன் வாங்கியிருக்கானும். அந்தப் பணத்தைத் தந்திடுனு ஒங்க காருவாரையா சண்டை போடுராரு.

**செங் :** டே கந்தா ! . . . ஒனக்கு வைத்திதானு கெடச்சான். பொறி கெட்டவனே. . . மாடில்லா மல் எப்படிடா ஒழச்சுக்கட்டுவான். . நாந்தான் முன்னமே சொல்லியிருக்கேனே . . வைத்தி வெளைஞ்சா கொண்டாந்து தந்திடுவான்னு. . .

**வை :** மகராசன் நீங்க நல்லாயிருக்கணுங்க.

**செங் :** சரி சரி போடா. . . . போய் வேலையைப் பாரு போ. . . ஏய்யா ! . . . வாத்தியாரையா ! . இந்த சர்க்கார் இப்பிடி விவசாயம் அது இதுக்கெல் லாம் செலவு செய்யிதே. அப்படியிருக்கப்போ. . . நம்மகிட்டெ யெல்லாம் கடன் பத்திரம் வாங்குன்னு சொல்ராங்க . . . சர்க்கார் எதுக்கு நம்மகிட்டே கடன் வாங்கணும்.

**உபா :** பத்தாக்குறையைச் சரிக்கட்டத்தாங்க. கடனு நீங்கள் கொடுக்கும் பணம் வட்டியோடு திரும்பிவருவது மட்டு மல்ல. அது மகத்தான தேசத்திருப்பணியைச் செய்ய உதவி செய்த பெருமையோடு திரும்பிவருகிறது. நமது நாட்டின் ஆக்கத் திருப்பணிக்காகப் பலர் சோர்வின்றி உழைக்கின்றுர்கள். நமக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பத்தைக் கடன் பத்திரங்கள் வாங்கு வதன் மூலம் பூர்த்தி செய்கிறேம். அத்துடன் நமது பொருளாதார நிலேயும் உயர்கிறது.

## காட்சி 3

**இடம் :** டாக்டர் வீடு.

**நிலே :** டாக்டர் மேஜையின் முன் உட்கார்ந்துகொண்டு வைத்தியப் புத்தகமொன்றைப் பார்த்துக் கொண் டிருக்கிறுர். உபாத்தியாயர் வருகிறுர்.

**உபாத்தியாயர் :** டாக்டர் சார் . . . குட் மார்னிங் !

**டாக்டர் :** குட் மார்னிங் ! . . . என்ன இந்தப் பக்கத்தில் ஆளேயே காணலியே . . .

**உபா :** இரண்டு நாளா . . . கொஞ்சம் வேலேயாய்ப் போய்விட்டது . . . ஐந்தாண்டுத்திட்ட நாடக மொன்று தயார் பண்ணிக்கொண்டிருந்தேன்.

**டாக் :** ஆமா ஆமா. . . அதுக்கெல்லாம் குறைச்சலில்லே. ஐந்தாண்டு ஐந்தாண்டென்று எய்யா. . . ஜனங் களேக் கொளப்புறீங்க.

**உபா :** டாக்டர் சார் ! . . . நீங்கள் கூடவா இப்படிப் பேசுவது. நன்ருகப் படித்து விவரந் தெரிந்தவர் களே, இப்படித் தப்பாக நினேத்தால் . . .

**டாக் :** நிறுத்துங்கய்யா. படிக்கிற பையன்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியாதவங்க கிட்டே யென்னய்யா திட்டமிருக்கு . . .

**உபா :** சரியாய்ப் போச்சு போங்க. உங்கள் பையன் படிப்ப தற்குக் காலேஜில் நீங்க கேட்ட இடம் கிடைக்க வில்லே யென்பதற்காக, திட்டத்தைக் குறைவாக மதிப்பது, எந்த வரைக்கும் பொருத்தமானது யென்பது உங் களுக்கும் தெரியாமல் போகாது. கடந்த ஐந்தாண்டுக்

காலத்தில் கல்விக்காக 406 லக்ஷம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. இது ஓரளவு தான் வேலை செய்தி ருக்கிறது என்பதற்காக, இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பெருமளவு ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறது . . . . அதாவது . . . . 1,365 லக்ஷம் ரூபாய் கல்விக்காக செலவு செய்வதென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன் தொழிற் கல்விக்காக . . . 135 லக்ஷமும் செலவு செய்யப்போகிறது. இந்தச் செலவினங்களின் பலா பலன் வருகிற வருஷங்களில் கிடைக்கப்போகிறது.

**டாக் :** செய்கிறது செய்கிறதென்று நீங்க தான் மெச்சிக்க வேண்டும்.

**உபா :** சார் ! திட்டங்களெல்லாம் பயிர் வைச்சு அறுவடை செய் கிற மாதிரி இல்லேங்க. தோப்பு வைச்சு வளர்க்கிறமா திரி. நிதானமாயிருந்தாலும் நீடிச்ச பலன் கிடைக் தும். இது உங்க இங்கிலீஸ் வைத்தியம் இல்லீங்க. நம்ம நாட்டு வைத்தியம். இப்ப நீங்க ஒரு முழு டாக்டர். உங்க வாழ்க்கையிலே எவ்வளவு கஷ்டப்பட்டிருப் பீங்க. எத்தனை நோயாளியை பரீக்ஷை பண்ணி பார்த்திருப்பீங்க. பாடுபட்டாத்தானுங்களே பலன் கிடைக்கும்.

**டாக் :** எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் தெரியாமலாயிருக் கிறது. என் பையனுடன் படித்த பையனுக்கு, மார்க்குக்கூடகுறைவுதான். அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. அப்போ இந்த பாரபட்சம் ஆகுமா ?

**உபா :** ஓ . . . . அதுவும் கேள்விப்பட்டேன். இடம் கிடைக்கப் பெற்ற பையன், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பாருக்கும் சில விசேஷ சலுகைகள் கொடுக்கப்படுவது உண்மை தான். அது பாரபட்சமல்ல. சமத்துவ நிர்மாணத் திற்கான செயல்முறை. அவர்களும் முன்னேறினால் சமுதாய வாழ்வு சமத்துவத்தோடு வளர முடியும். பிற்பட்டாரின் நலத்திற்காக கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 449 லட்சம் செலவு செய்யப் பெற்றிருக்கிறது. நடைபெறும் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்காக 700 லட்சம் ரூபாய் செலவு செய்ய முன் முன்வந்திருக்கிறது. இந்த சாதனை களை எண்ணிப்பார்த்தால் தான் தெரியும் நமது நாட்டின் சமத்துவ இன்பம் !

**டாக் :** என்ன இருந்தாலும் சார் ! . . . .நம்மவங்ககிட்டே கொஞ்சம் சுறுசுறுப்பு வேணும் . . . .(இந்தச் சமயத்தில் நோயாளி ஒருவன் துடித்துக்கொண்டு வருகிறான்).

**நோயாளி :** அய்யோ . . . . அப்பப்பா . . . . தாங்க முடியலியே . . . .அம்மா . . .

**டாக் ;** எம்பா வரும்போதே கத்துறே. சீக்கு வந்தாப் பொறுத்துக்கத்தான் வேணும். அதுக்காக கத்தினுப் போயிடுமா.

**நோயாளி :** அய்யோ தாங்க முடியலீங்க . . . . அய்யய் யோ . . . .

**டாக் :** நான் கொடுத்த மருந்தை வேளா வேளைக்குச் சாப்பிட்டியா . . .

**நோயாளி :** சாப்பிட்டேங்க ஒண்ணும் கொணந் தெரியலே. நல்ல மருந்தாக் கொடுங்க

**டாக் :** எம்பா . . . மருந்து சாப்பிட்ட ஒடனேயா சவுகரியமாப் போகும். மந்திரத்திலே மாம்பழங் கொண்டார்ர மாதிரிண்ணு நெனைச்சே. மெதுவாக தானே மருந்து வேலை செய்யும். (மருந்து கலக்கிக் கொடுக்கிறார்.) (நோயாளி சென்றதும்) இந்தப் புரியாத பட்டிக்காட்டிலே யிருந்து கொண்டு தொல்லையாப் போகிறது. மருந்தைக் குடிக்காமலே மருந்தைக் கொறை சொல்றது. பெரிய நியூ ஸென்ஸ்.

**உபா :** டாக்டர் ஸார். குறை சொல்லும் நோய் இருக் கிறதே, இது பட்டிக்காட்டாரிடம் மாத்திரமில்லை, நன்றுகப் படித்தவர்களிடமும் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

**டாக் :** சரிதான் போங்க. என் நாடியையே பிடிச்சுப் பேச ஆரம்பிச்சிட்டீங்களே.

**உபா :** சார் ! மருந்தின் குணத்தைப் புரிந்து கொள்ளும் அளவு நோயாளிக்குப் பொறுமை இல்லை என்கிறீர்கள். ஆனால், நாட்டின் நிலைமையைப் புரிந்து கொள்ளும் பொறுமையை நீங்கள் இழந்து விட்டீர்கள் என்பதை உணர மறுக்கிறீர்கள். ஒரு வீட்டைக் கட்டுவதற்கே பல மாத காலம் தேவைப்படுகிறது என்றால் பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டிருந்த நாட்டைத் திருத்தியமைக்க எத்தனை ஆண்டுகள் தேவைப்படும். சார் ! இரு ஐந்தாண்டுத் திட்ட காலத்தையும், வளர வேண்டிய தேசத்தையும் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அப்பொழுதுதான் தெரியும் ஐந்தாண்டுத் திட்டங்களின் மகத்தான சக்தி.

## காட்சி 4

**இடம் :** பண்ணையார் வீடு.

**நிலை :** வைத்திலிங்கம் மெதுவாகப்பாடிக்கொண்டு வருகிறான் :

**பண்ணையார் :** யார்ரா ? . . . வைத்தியா ? . சின்னக் குண்டு பூராவும் உழுதாச்சா ?

**வைத்தி :** ஆச்சுங்க. நாளைக்கு அந்த மேட்டு செய்யையும் 2 சால் உழுதாக்கா வேலை முடிஞ்சாப்பிலேதான்.

**பண் :** நாளைக்கு யார் யார் வருவாங்க ஏர்கட்ட ?

**வை :** இன்னக்கி வந்தவுங்கல்லாம் வருவாங்கன்னு முத்தையா சொல்லுச்சே. இன்னம் ரெண்டொருத்தர் கூட இருந்தா . . . ஈரங்காயுமின்னாலே உழுதிடலாம்.

**பண் :** ஆளுத்தானே கெடைக்கலெ. உனக்குத் தெரிஞ்சா கூட்டியாவே.

**வை :** யாருங்க இருக்கா . . . எல்லாம் மினுக்கா ஒடம்பு வலிக்காமெ பொழைக்கனுமின்னு நெனைக்கிறுங்க.

**பண் :** ஏண்டா . . . ஒம்மச்சினன் ஒருத்தன் பட்டாளத்திலிருந்து வந்து . . . சும்மாத்தானே சுத்திக்கிட்டுத் திரிஞ்சா . . .

**வை :** அவனுக்கல்லாம் . . . அல்டாப்பிலே காலந் தள்ள லாமின்னு நெனைக்கிருங்க. பட்டாளத்துக்குப் போர துக்கு முன்ஞடி நல்லாத்தான் ஒழைச்சான். காலே யிலே கட்டின ஏரை இருட்டுக்கூடக் கலைக்காமே உழுதுட்டு வருவான். இப்ப யென்னடான்ஞ . . பட்டாளத்துக்குப் போனப்புறம் . . . சீமைத் தொரையாட்டம் பேசிக்கிட்டு வம்பளக்கிருனே தவற ஒடம்பு வளைய மாட்டேங்குது.

**பண் :** அப்ப . . . சோத்துக்கு . . .

**வை :** அந்த வயத்தெரிச்சலே ஏங்கேக்கிறீங்க . . . என்ன மோ எந்தங்கச்சி தலையிலே ஆண்டவன் அப்படி யெழுதிப்பிட்டான். அந்தப் பொண்ணு அங்கினே இங்கினே ஏதோ அத்தக் கூலி வேலே செஞ்சு கஞ்சி ஊத்துதுங்க . . . அந்தக் கஞ்சியையும் சும்மாவா குடிச்சுப்பிட்டுப் போருன். காலரைக்கா அசந்து மறந்து வச்சிட்டா அதை திருடிப்போயி எட்டுக்காசுப் போடறது சீட்டாடுறதுமா அநியாயம் பண்ராங்க. ஒழைச்சு வேலே செஞ்சா என்னடான்னு கேட்டா . . . கலக்டரு வேலேக்குப் படிச்சவ ஞட்டமாப் பேசிருன். இதுகளுக்கு பெரிய உத்தி யோகம் கெடைக்கணுமாம் . . . சர்க்காரு தரல்லே யாம் . . . அதுக்காக . . . டிரைப்பண்ருராம் டிரை.

**பண் :** இருக்கிற வேலேயை ஒழுங்காப் பண்ணி பொழைக்க முடியாமெ . . . சர்க்கார் வேலே தரலேங்கருஞ.

**வை :** எச்சி சோறு திண்ணிப்பய. சர்க்காரு வேலே கொடுத் தாப்பிலே முதுகு வளைஞ்சு செஞ்சு பிடுவாஞக்கும். அந்தப் பவிசையுந்தான் பார்துட்டேனே. கூட்டுற வுங்க . . . அதாங்க . . . என்ன . . . பண்ணே . . .

**பண் :** ஓ ? கூட்டுறவுப் பண்ணேயா ? . . .

**வை :** ஆமாங்க அதிலே . . . வாத்தியாரய்யா சொல்லிச் சேர்த்து விட்டாரு. மூனு நாளேக்குள்ளே வேலேக்கு போகமாட்டேனுட்டான். என்னடான்ஞ . . . இவருக்கு அந்த வேலே ஒத்து வராதாம்.

**பண் :** கவர்னரு வேலே கெடக்கலேங்கிருஞ ?

**வை :** வாயைப்பிளுத்திப்பிட்டு . . . ஊரை எய்க்கிற பயலுக்கு ஒடம்பு வனங்க வேணுமில்ல . . .

**பண் :** தொலேயரான் போ ! . . . உருப்படியாகாத பய.

**வை :** எப்பிடி எப்பிடி இருந்ததுகல்லாம் இப்ப எப்பிடி யோ மாறிக்கிட்டுயிருக்கு. இந்தச் சுளி கெட்டபய மவனுக்கு நல்ல புத்தி வர மாட்டேங்குது. நல்ல சுளி நடுவேயிருக்க கோட்டான் சுளி குறுக்கே போட்டிருக்கு. இவனுட்டமாத்தான் பட்டாளத்துக்குப் போன சங்கன் இப்ப . . . நல்ல நெலேமையிலே யிருக்காங்க. இந்தக்கிராம சேவக்கையோட சேந்துக் கிட்டு அவரு சொன்னபடி யெல்லாம் சனங்க கிட்டேச் சொல்லி கூட்டுறவுகயிறு பண்ணே ஏற்பாடு செஞ்சிருக்காங்க.

**பண் :** ஆமா ஆமா . . . சர்க்கார் இந்தச் சிறு கைத் தொழில்லே . . . அதுவும் கிராமக் கைத்தொழி லுக்கு நல்ல ஊக்கம் கொடுத்து வராங்க. இந்த மாதிரிச் சின்ன கைத்தொழிலுக்காக நம்ம சர்க்கார் 44 லட்சம் செலவு செஞ்சிருக்காம் . . . அது பத்தலேன்னுட்டு . . . இப்ப 15 லட்சம் ரூபாய் செலவு செய்யப் போகுதுன்னு நேத்து வாத்தியாரு சொன்னுரு.

**வை :** அம்மாடி எம்முட்டு ரூபாங்க . . . அம்மா . . . என்னமோ . . . ஒங்க புண்ணியத்திலே . . . பொழைச்சிருந்தா . . . நல்லாப் படிச்சுக்கோணு மின்னு ஆசையிருக்குங்க . . .

**பண் :** வரட்டும் வரட்டும் . . . நம்ம ஊரும் ஒலகமும் ஒத்திருந்தா எல்லாஞ் செய்யலாம் . . .

**வை :** சரி . . . வரேனுங்க.

**பண் :** பொறப்பிட்டியா. (மடியைத்தடவி . . .) இந்தா கூலிக்காசு . . . எட்டணுத்தானிருக்கு . . . சில்லரையில்லே. . . . நாளேச் சேர்த்து வாங்கிக்க.

**வை :** அதனுலே என்னங்க . . . அன்னக்கி நான் சொன்ன சங்கதியை இன்னம் கவனிக்கலே போலிருக்கு . . . .

**பண் :** எது இந்த உழவு மாடுதானே. ஞாபகமில்லாமெ யென்ன. இன்னம் ரெண்டு பொழுதிலே முடிச்சுப்பிடுரேன். பணத்தை வேரெதையும் வாங்கிச் செலவு செஞ்சிடாதேடா . . .

**வை :** பத்திரமாக வச்சிருக்கேங்க. (போகிருன்.)

**பண் :** டே வைத்தி ! . . . .

**வை :** என்னங்க.

**பண் :** இன்னமே போயித்தானே கஞ்சி காய்ச்சணும்.

**வை :** ஆமாங்க.

**பண் :** டே முத்தையா . . .

**முத்தையா :** ஏங்க. கூப்பிட்டீங்கள்ா . . .

**பண் :** வைத்திக்குக் கொஞ்சம் கஞ்சி ஊத்திக் கொடுக்கச் சொல்லு வூட்லே போயி சாப்பிட்டுக்கிவான். பாவம்.

## காட்சி 5

**இடம் :** வைத்தியலிங்கத்தின் வீடு.

**நிலே :** வைத்தியலிங்கம் பண்ணேயார் வீட்டில் கொடுத்த கஞ்சியை ஊற்றிக் குடித்துக் கொண்டிருக்கிருன். அவன் தங்கை காவேரி வருகிருள்.

**வை :** காவேரி ! . . . . வாத்தா . . . . வா.

**காவேரி :** இப்பத்தான் கஞ்சி குடிக்கிறியா.

**வை :** ஆமா காவேரி . . . . இப்பத்தான் வயலிலிருந்து வந்தே . . . ஆமா . . . நீ சாப்பிட்டியா . . . (சாப்பிட்டதைப்போல் தலேயை அசைத்தாள் காவேரி) . . . ஹூம் காவேரி . . . மன்ஞரு வந்தாஞ . . .

**கா :** வராமெ யென்ன. அன்னேக்கு ராத்திரியே வந்திருச்சே.

**வை :** நாஞ் சொன்னதைச் சொன்னியா ?

**கா :** சொன்னே . . . . அதுக்கு . . . . அப்படி யெல்லாம் வேலே செய்யனுமிங்கிற அக்கரை இல்லேயாம்.

வை : ஹூம் . . . (பெருமூச்சு) என்னமோ தலை விதி! இப்படிப் போட்டுச்சு . . . ஏதோ ரெண்டெழுத்து படிச்சிருக்கானேன்னு ஒன்னைக் கொடுத்தே . . . அது இப்படி ஓடுகாலியாப் போகுமின்னு கண்டேன். . . .

கா : முந்தா நாளு . . . கத்திரிக்காய் வித்த மூணு பணத்தையும் வீட்டிலே வச்சிப்பிட்டு, வாய்க்காப் பக்கம் போயி ரெண்டு கெண்டைக்குஞ்சாவது புடிச்சுக்கிட்டு வருவோமின்னு போயிருந்தேன் . மீனைப் புடுச்சுக் கிட்டு வீட்டுக்கு வந்து . . . அரிசிக் குருணை வாங்க பணத்தைப் பார்க்கிறேன். காணலே !

வை : அப்பறம் !

கா : . . . அப்பறம் என்ன பண்றதுன்னுட்டு . . . மீன்குஞ்சை மேல வீட்டுக்காரரு கிட்டே வித்துப்புட்டு கேப்பை வாங்கிக் கூழுக்கிண்டினேன் . . .

வை : இந்த திருட்டுப் பயமவனை என்ன பண்றது . . . என்னன்னு சொன்னாலும் படியமாட்டான் போலிருக்கே . . . (பேசிக் கொண்டிருக்கும் பொழுதே காவேரி பானையைத் திறந்து பார்க்கிருள்).

கா : எண்ணே . . . நீராத்தண்ணியில்லே . . .

வை : நான்தான் இன்னிக்கு சமைக்கலியே . . . பண்ணை யார் வீட்டிலே கொடுத்த கஞ்சியைத்தான் குடிச்சிக் கிட்டு யிருக்கேன் . . . எ, காவேரி . . . . இங்கே வா . . . நீ இன்னம் சாப்பிடலை . . . (மௌனம்) அடக்கண்ராவியே . . . மொதல்லே சொல்லப்படாது . . . நாங்குடிக்கிறதை யாச்சும் ஊத்தி தந்திருப்பேனே. . . . ஒன்னை பசி யோடே வச்சிப்பிட்டுத்தானே நானுச் சாப்பிட்டிருக் கேன் . . . எம்மா இப்படியிருக்கே . . . மொதல்லே சொன்னு என்ன . . . எங்கிட்டே கூடவா சொல்லப்பிடாது . . . பசியும் பட்டினி யுமா கெடக்கவா ஒனக்கு கல்யாணம் பண்ணி வச்சேன். . . . அப்பா சாகும்போது "தங்கச்சி யைக் கண்கலங்காமே பார்த்துக்க"ன்னு சொன்னதுக் குத்தான் . . . ஒன்னைக் கஞ்சிக்கு காத்தாப் பறக்க விட்டிருக்கான் கடவுள் !

**கா :** ஏண்ணே அழறீங்க . . . ஏ விதிக்கு நீங்க என்ன பண்ணுவீங்க . . . .

**வை :** அது சரி . . . மொதல்லே கேட்டதுக்கு சாப்பிட்டேன்னு தலையை ஆட்டினியே . . .

**கா :** பாவம் ! . . . ஒனக்கு யாருயிருக்கா . . . . நீ ஒருத்தனுக் கெடந்து ஒழைச்சுக் குடிக்கிறே . . . ஆத்தாயிருக்கா அடுப்பு மூட்ட ? வந்தவயிருக்காளா வடிக்க . . . என்னமோ . . . அனுதியாயிட்டோம் . . . அதோட நானும் வந்து சாப்பிடலேன்னு சொன்னு . . . அந்த அரை வயறு கஞ்சியையும் குடிச்சிருக்க மாட்டியேன்னுதான் சொல்லலே.

**வை :** (பெருமூச்சு) நல்ல காலம் வராமலா போகும் . . . சாமி கண்ணெத்தொரந்து பாத்திட்டா எம்மாத்திரம் இதெல்லாம். காவேரி . . . இந்தா இந்தத் தண்ணீயையாவது குடி . . . வா . . . வா . . . (வைத்திலிங்கம் சாப்பிட்டுக் கொண்டிருந்த வட்டிலேவிட்டு எழுந்து விடுகிறான். காவேரி உட்கார்ந்து வட்டில் தண்ணீரைக் குடிக்கப்போகும் பொழுது, அந்த காவேரியின் கணவன் மன்னுர் வருகிறான்.)

**மன் :** அது தானே என்னடாப்பாண்ணு பாத்தேன் . . . வேளா வேளைக்கு இங்கே வந்து வெட்டிப்பிட்டு பட்டினிப் பிரசாரமா செய்றே . . . (காவேரி வட்டிலே கீழே வைத்து எழுந்து நிற்கிறாள்).

**வை :** வா! மச்சான் !

**மன் :** ஆமா . . . ஒந் தங்கச்சி பண்றது நல்லாயில்லே.

**வை :** என்னு பண்ணிப்பிடுச்சு.

**மன் :** பண்ணியிருந்தா பல்லேப் பிடிங்கியிப்பேன் . . .

**வை :** பின்னே என் வர்ரப்பவே வள்ளுன்னு விழுற.

**மன் :** மரியாதியாப் பேசு! ஒங்க வூட்டு நாயின்னு நெனேச்சே. . . .

**வை :** நாயாயிருந்தா நடு வீடு வரைக்குமா விட்டிருப்பேன்.

**மன் :** போடா நான்ஸன்ஸ்.

**வை :** போடா நீ சென்ஸ். இங்கிலீஷில்ல **பேசுராரு அதுக்**கெல்லாம் கொரைச்சலில்லே. . . .

**மன் :** இடியட் என்ன சொன்னே.

**வை :** இடிகட்டு நீந்தாண்டா. . . .

**மன் :** போடா பட்டிக்காட்டு ப்ரூட்.

**வை :** இந்த பாரு புரூட்டு கிரூட்டுன்னு பேசினே மச்சாங்கிற மருவாதி போயிடும். . . .

**மன் :** பேய் என்னடா டாப்லே போறெ . . செட்டிய வீட்டுப் பிள்ளே செல்லப் பிள்ளேயாயிருந்தா பட்டாளத்துக் காரனு பயப்படுவான்.

**வை :** இவரு பெரிய சண்டியரு, போட்டாத் தெரியும் மூங்கணுங்கயத்தை. தும்பைப் புடுச்சுக்கிட்டு குச்சியை கையிலே எடுத்தான்னு பாப்பேணிந்த சண்டியரை! கலக்கிப்பிடமாட்டேன் கலக்கி.

**மன்:** கலக்குவாறு. சேரைக் கலக்கி மீனு புடிக்கிற தின்னு நெனேச்சே . . புப் . . . புட்டுப்பிடுவேன் ரொட்டி யாட்டமா . . . லெப்ட் . . . ரைட் . . . லெப்ட் . . . ரைட்டுன்னு விட்டாத் தெரியும் கன்னத்திலே . . . கூத்தாடாது குடும்பம் !

**வை :** ஆத்தாடி! அம்பிட்டு நெனப்பு நம்ம கிட்டெ வேண்டாமுங்க. கட்டின பொண்டாட்டிக்கிக் கஞ்சி ஊத்த முடியாதவனுக்கு ரப்பும் ராங்கியும் எதுக்குடா.

**மன் :** நீ யொண்ணும் அள்ளிக் கொடுத்திடலியே கஞ்சிக்கி செத்த பசங்க . . . எப்பப் பாத்தாலும் கஞ்சி கஞ்சியின்னு சாவுராங்க . . . மேனுட்லே பார்ரா . . . . பொம்பிளே சம்பாரிச்சு புருஷனுக்கும் போடுரா. இந்தக் காட்டுப்பய என்னடான்னு நாஞ்சம் பாரிச்சு பொண்டாட்டிக்கிப் போடனுமின்னு சொல்ருன். இந்த நாஸ்டி பெல்லோ வீட்டிலேயா பொண்ணெடுக்கனும். (இந்தச் சமயத்தில் வெளியிலிருந்து வைத்தியைக் கூப்பிடுதல்).

**வெளியில் :** வைத்தி! வைத்தி ! . . .

**வைதி :** யாரது . . இந்தா வந்திட்டேன் . . தங்கச்சி, இங்கே தானேயிரு வந்திர்றேன். (போகிருன்).

**மன் :** எண்டி இங்கே எதுக்கடி வந்தே. இந்தப் பரதப்பய வீட்டிலே பட்டினிப் பாட்டு பாடுறதுக்கா. நாஞ்சாப்பிட்டு ரெண்டு பொழுதாச்சு என்னை பட்டினியாப் போட்டிட்டு இங்கே வந்தியோ கொட்டிக்க. கொண்டாடி அந்தக் கஞ்சியை! (வட்டிலிலிருந்த கஞ்சியைக் குடித்துவிட்டு) ஹாம் . . . . தூ! . . . . இந்தப் பஞ்சைப்பய வீட்டுக் கஞ்சியிலே ஒரு பருக்கை கூட அம்பிடலை. பரதேசிப்பயக . . . . கஞ்சிக்கிச் செத்த பயக. (மெதுவாகவீட்டிற்குள் நுழைந்து அடுக்குப்பானையை உருட்டுகிறான்.)

**கா :** அங்கே என்னத்தை உருட்டிறீங்க . . . ஹூம் . .

**மன் :** பெரிய லச்சாதிபதி வீடு. காசுப் பணமும் எரைஞ்சு கெடக்கு . . . அதை அள்ளிக்கப் போறேம். கழுதை! . . . வக்கத்தபய வீடு! . . . (அடுக்குப் பானையிலிருந்த சில்லறையைத் திருடி ஒழிக்கிறான்.)

**கா :** வக்கத்த பய வீட்டை ஏன் உருட்டணும்.

**மன் :** உருட்டுராக. நெருப்பெட்டி யிருக்கான்னு பாத்தேன் . . . பீடி பத்தவைக்க. வரலிப்பய வீட்டிலெ வாழுதாக்கும். (வெளியில் போகிறான். வைத்தி உள்ளே நுழைகிறான்.)

**வை :** என்ன தங்கச்சி. எங்கே மன்னுரு போயிட்டானு.

**கா :** ஆமண்ணே . . . . ஆம எங்கே போயிருந்தெ.

**வை :** சேருவாரய்யா வூட்டு மாட்டுக்கு மூக்கடப்பான் நோவு . . . பாவம் கெடந்து துடிக்குது . . .

**கா :** ஒனக்கு மாட்டு வைத்தியம் தெரியுமா . . .

**வை :** எனக்கென்ன தெரியும் மாட்டு வைத்தியருகிட்டெ காமிக்கச் சொன்னே.

**கா :** நம்ம ஊரிலே மாட்டு வைத்தியர் இருக்காரா.

**வை :** ஆமா! ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் தேசீய அபிவிருத்தியின்னு ஆரம்பிச்சிருங்காகல்லெ. அதிலே ஆடு, மாடு, கோழி, நாய் முதலியவைகளுக்கு வைத்தியம் செய்ய வைத்தியரை நியமிச்சு இருக்காங்க.

**கா :** ஆடு மாடுகளுக்குக் கூட்வா . . .

**வை :** ஆடு மாடில்லாட்டி வெவசாயம் என்ன ஆகும்.

**கா :** ஆமா . . . ஆமா . . .

**வை :** இந்த அபிவிருத்தித் திட்ட மிங்கிராங்களே . . . அது மூலம், நல்ல உரங் கொடுக்கிறுங்க. நல்ல பொறுக்கு விதைகள் தர்ராங்க. இப்படி எல்லா ஒதவிகளும் செய்கிறுங்க. எல்லாத்துக்கு மேலே கடனுதவியும் செய்ராங்க. கடங்கவும் ஞாவுகம் வருது. ரூவாய் தாரேன் . . . அரிசி வாங்கிச் சமை. (வீட்டுக்குள் சென்று அடுக்குப் பானையைத் திறந்தவுடன்.) காவேரி ! . . . இங்கே வச்சிருந்த பணத்தைக் காணலியே எங்கே . . . ரெண்டு ரூவாய் சில்லறையாப் போட்டு வச்சிருந்தேன். மன்னுரு கின்னுரு இங்கெ வந்தாரு ?

**கா :** ஆத்தா்டி. அவரு இந்தப் பக்கமெ போகலியே.

**வை :** பின்னெ எப்படிப் போகும்.

**கா :** பொல்லாதவன் எம்புருசங்கிறதுக்காக, இல்லாத பொழையைச் சொல்லாதிங்கண்ணே. அவரு உள்ளேயே போகலியே.

**வை :** என்னத்தைச் சொல்ல இந்த அநியாயத்துக்கு. (பெரு மூச்சு) சரி சரி. (மடியிலிருந்த அரை ரூபாயைக் கையிலெடுத்துக் கொண்டு) இதைக் கொண்டெ சமை போ. நல்ல வேளை மாடு வாங்கக் கொடுத்த பணத்தை வாத்தியாருகிட்டெ கொடுத்து வச்சது. சரி தங்கச்சி காலா காலத்திலெ சமை போ. . . . இந்தா காவேரி ! . . . நாய வெலைக் கடயிலே அரிசி வாங்கு.

## காட்சி 6

**இடம்:** **டாக்டர் வீடு.**

**நிலை :** டாக்டர் பத்திரிகை பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது உபாத்தியாயர் வருகிறுர்.

**டாக்டர் :** வாங்கையா . . . வாங்க. ஒங்க ஊர் லெ . . . நரி நட மாடுதா மில்லெ.

**உபாத்தியாயர் :** நரியா ! . . .

**டாக் :** ஆமய்யா இந்த ஊர்க்காரங்க அப்படித்தானெ. . . சொல்ராங்க. நரி நரியின்னு (சிரிப்பு).

**உபா :** ஓகோ ! . . . . அதைச் சொல்றீங்களா. திடீர்னு நரியிங்கவும் என்னமோன்னு நெனைச்சேன். கிராமத்திலே கால்ரான்னு சொல்லாமெ நரியின்னு சொல்றது பழக்கம்.

**டாக் :** நல்ல பழக்கமய்யா. பத்தாம் பசலிங்க.

**உபா :** டாக்டர் ஸார் ! . . . நாம் கூட பத்தாம் பசலியிலிருந்து தானே இப்படி வந்தோம். சூது வாது தெரியாத கிராம மக்களைப் பார்த்து அப்படிப் பேசாதீங்க.

**டாக் :** சார் ! நான் தான் கேட்கிறேன் நாலு பெயரைப் போல நாகரீகமாய் பேசக்கூடத் தெரிய வேண்டாம்.

**உபா :** டாக்டர் சார் ! . . . . எது நாகரீகம் என்பது நீங்கள் பேசுவதிலிருந்தே தெரிகிறதே. நம்மை விட மிகவும் அதிகமாகச் சிந்தித்துச் செயலாற்றும் விஞ்ஞானிகள் நம்மைப்பார்த்து ‘ மனிதப் புழுக்கள் ’ என்று சொல்கிருர்கள். அவர்களின் வளர்ச்சி அப்படிப் பேச வைக்கிறது. ஆனல் அவர்கள் நாகரீக வளர்ச்சியில் மேம்பட்டிருக்கலாம், நீங்களும் மேம்பட்டிருக்கலாம், பேசும் பேச்சு இன்னும் முன்னேறவில்லை, நாகரீகமும் அடையவில்லை. ஒருவர் மற்றொருவரை இழித்துப் பேசுவதே பெரும் அநாகரீகம் ! உள்ளதை உள்ளபடி விமர்சித்துப் பேசுவது தான் நல்ல நாகரீகமென்று நான் சொல்வேன். வாழ் நாளெல்லாம் உழைப்பதைத் தவிர உலகம் எப்படியிருக்கிறதென்பதைக் காண முடியாத ஏழைகள் கிராம மக்கள். அவர்கள் வாழ்வு தான் நாட்டின் உயிர். சுருக்கமாகச் சொன்னல் நகரங்களின் சமயலறை கிராமங்கள் தான்.

**டாக் :** ஏன் அவர்கள் வியர்வை தான் நீராவியாக மாறி மழை கொட்டு தென்று சொல்லுங்கள். வாத்தியாரையா இந்தக் கதை எனக்கும் தெரியுமய்யா. இன்னும் அவர்கள் முன்னேற்றத்திற்கு வரவில்லையே யென்றுதான் சொல்கிறேன்.

**உபா :** வந்திருவாங்க சார் !

**டாக் :** ஏன் ஒங்க ஐந்தாண்டுத்திட்டம் பர பரன்னு கையைப் பிடித்து இழுத்து முன்னுக்கு நிறுத்தி விடப் போகுதோ !

**உபா :** அப்படிக் கையைப் பிடித்து இழுத்து வந்து விட முடியுமானால், உங்கள் உதவியையும் வைத்துக் கொண்டாவது முன்னுக்கு நிறுத்தி விடலாமே. இது படிப்படியாக மன மாற்றத்தின் மூலம் சாதிக்க வேண்டிய காரியம். ஒங்க ஐந்தாண்டுத்திட்டமென்று சொன்னீர்களே அதை நமது ஐந்தாண்டுத் திட்டமென்று நாம் அனைவரும் நினைத்தால் தான், எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**டாக் :** பார்க்கலாமே. அது சரி. காலராவிற்காக என்ன செய்தீர்கள்.

**உபா :** காலையிலேயே தகவல் அனுப்பி விட்டேனே.

**டாக் :** எங்கே.

**டபா :** ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு. கிராம அபிவிருத் தித்திட்டம், கிராமங்களுக்கு சுலபமான வைத்திய சிகிச்சை யளித்து வருகிறதே. நடமாடும்ஆஸ்பத்திரிகளை நீங்கள் பார்க்கவில்லையா.

**டாக் :** வான்களில் வந்துவைத்திய உதவி செய்வது தானே. அந்தக் கார்களில் ஒரு சின்ன ஆஸ்பத்திரிக்குரிய சாமான்களெல்லாம் இருக்கிறது. இது இன்னும் எல்லா இடங்களிலும் வேலை செய்யவில்லையே.

**உபா :** சீக்கிரம் சகல இடங்களுக்கும் அது விஸ்தரிக்கப் படும். சென்ற ஐந்தாண்டுத் திட்ட காலங்களிலே வைத்தியத்திற்காக 248 லட்சம் ரூபாய் செலவு செய் யப்பட்டிருக்கிறது. . . . நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்திலே வைத்தியத்திற்காக 925 லட்சம் ரூபாய் செலவு செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. . . போன திட்டத்தைக் காட்டிலும் எவ்வளவு அதிக மான ரூபாய் செலவு செய்யப் போகிறது என்பதி லிருந்தே வைத்திய வசதி மிகவும் அதிகமாகக் கிடைக்குமென்பது தெரியவில்லையா. இது மாத்திர மென்று நினைத்து விடாதீர்கள். சுகாதாரத்திற்காக 475 லட்சம் செலவு செய்திருக்கிறது. இன்னும் 761 லட்சம் செலவு செய்யப்போகுது.

**டாக் :** எய்யா. . . . இதெல்லாம் நமது மாகாணத்தில் செலவு செய்யும் தொகை தானே.

**உபா :** ஆம் ! . . .

**டாக் :** எய்யா. . . . இந்த ஊர்லே கால்ராவிற்காக ஏதோ மாரியம்மாவிற்கு பூசை போடப் போராங்களாமே. என்னயிது !

**உபா :** ஏதோ நம்பிக்கை. இதெல்லாம் கால மாற்றத்தில் சரியாகப் போய்விடும். போன வருஷம் ஒங்க பைய னுக்கு பழநியில முடி எடுத்தீங்களே . . . . . அது ஏன் !

**டாக் :** அது பெண்கள் விஷயம் அதிலெல்லாம் நாம் தலையிட முடியுமா ?

**உபா :** உங்களைப் போலத்தாங்க மற்றவங்களும். நீங்கள் மற்றவர்களைப்பற்றி பேசுமுன் உங்களையும் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் எதுவுமே ஆச்சரியமா தோணுது.

## காட்சி 7

**இடம் :** தெரு.

**நிலை :** மன்னார் பீடி பிடித்துக்கொண்டு சீட்டி யடித்தவாறு வரும்பொழுது காவேரி எதிரே வருகிறாள்.

**காவேரி :** **என் மச்சா !** எங்கே இப்படி வெயில்லெ பொறப் பிட்டீங்க. **அடியாத்தே** உன் **முகரக்கட்டக்கு** பீடி வேரே. . . .

**மன்னார் :** டாம் ! . . . . நான்சென்ஸ் . . . மானர்ஸ் இல்லெ.

**கா :** அட **சரிதான்** நீங்க பட்டாளத்துக்காரருன்னு தெரியும்.

**மன் :** என்னடி தெரியும்.

**கா :** முடிச்சவித்த மூஞ்சிதான்னு.

**மன் :** எவண்டி முடிச்சவித்தான். ஒங்க அண்ணெ பெரியரிச் ஹானரோ . . . . பாத்துப் பேசு. பல்லெ ஒடைப்பேன்.

**கா :** ஒடப்பே ஒடப்பே. கட்டின புருஷனுச்சேன்னு . . . எம் புருசன் வீட்டுக்குள்ளே போகலெ காசையும் எடுக்கலேன்னு எங்கண்ணங் கிட்டெ பொய் சொன் னேன். எம்மானம் போவுது. இந்த உசுருதான் போக மாட்டேங்குது. ஒழைச்சுத் தின்னு ஒடம்பா வலிக்குது. திருடித்தின்ன வெக்கமா யில்லெ.

**மன் :** சீச்சீ . . . நாயி நாயி.

**கா :** அதுக்காவது நன்றியிருக்கு. தின்ன வீட்டிலெ திருடாது.

**மன் :** (கோபமாக காவேரியின் கன்னத்தில் அடித்து விடு கிறான்.) நாயம் பேசிரா நாயம். இந்தப் பட்டிக் காட்டுச் சனியங்களோடெ பெரிய ட்ரபுளாப் போச்சு. அவ்வளவு பெரிய கமாண்டர் கூட 'டே' ன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டான். மன்னூர் மார்ச் பண்ணிப் போற ஸ்டயிலைப் பாத்து மலைப்பாங்களே. டேட்டினு டேட்டிதான். இந்தக் கஞ்சிக்கிச் செத்த பசங்க எப்பப் பாத்தாலும் கஞ்சி கஞ்சி யின்னு சாகுராங்க. மாட்டுக் கக்கூசை கையிலெ எடுக்கிற பயலுகளுக்கு மரியாதி என்ன தெரியுது . . .

## காட்சி 8

**இடம் :** மரத்தடி.

**நிலை :** மன்னூர், கந்தப்பன், காத்தன் முதலானோர் சீட்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

**க்ந்தப்பன் :** போடு மாஸ் . . . போடு போடு . . . மாஸ் . . . மாஸ்.

**க்ாத்தன் :** மாஸென்ன ஒரணுவா . . . இரு . . . (அணுவை வைக்கிறான்).

**மன்னூர் :** ரெண்டணு . . . என்ன சொல்றே . . . என்னடா சொல்றே.

**கந் :** இரு . . . அப்படியே . . . இன்னம் . . . மாஸ் . . .

**க்ருப்பன் :** நானும் ரெண்டணு . . .

**கந் :** ஹூம் . . . அஞ்சாத சிங்கமடா . . . எவ்வளவு நானும் எத்தனை பேருன்னாலும் வைங்க . . . காஸ் . . . காஸ் . . .

**மன் :** ஹூம் அடி சீட்டை . . .

**கந் :** கேள்வி யென்ன.

**காத் :** ஆடுதன் ஆஸ் !

**மன் :** ஆடுதன் ஆஸ் ! ஆடுதன் ஆஸ் ! ஆடுதன் ஆ . . . ஸ் . . . கைமேலெ காஸ் . . . கை மேலெ காஸ் . . . இரு . . . இரு . . . இரு இங்கே ! . . . . செத்தாண்டா ஒருத்தன் . . . (ஜெயித்ததால் சீட்டைக் கீழே போடுகிறான்.)

**கந் :** கலைச்சு போடு சீட்டை . . .

**மன் :** சரி சரி போடுடா . . .

**கந் :** மாஸென்ன ? . . .

**கரு :** ரெண்டண . . உழுத காசுடா ஒழுங்காப் போடு . .

**கந் :** இன்னம் . . . இன்னம் . . .

**மன் :** எட்டண . . . அடுக்குப்பானைக்காசிடா . . . அடுக்குப்பானைகாசு . . . அள்ளப்போவுது பார் . . .

**கந் :** கேள்வி என்ன.

**கரு :** கிளாவர் ராசா . . .

**மன் :** கிளாவர் ராசா . . . கிளா . . . வர் . . . ரா . . . சா . . .

(திரைக்குப் பின்னிருந்த ஒருவர் பேசுதல்)

**தி.பி. :** ஆக்க வேலைகளில் ஊக்கங்காட்ட வேண்டிய பாட்டாளிகள் சமூக விரோதச் செயல்களிலே, தங்கள் பொழுதை வீணாக்குகிறார்கள், பொருளையும் பாழாக்கி, வறுமையை விலை கேட்டு வாங்குகிறார்கள். இது மிகவும் தீமையானது. பசியோடு காத்திருக்கும் தனது மனைவி மக்களையும் மறந்து, தன்னைத்தானே அழித்துக் கொள்ளுகிறார்கள்.

ஓய்ந்த நேரங்களிலே பொழுது போக்க பந்தாட்டம், ஓட்டம், சடுகுடு, கிளித்தட்டு, சிலம்பம், குஸ்தி முதலிய உடல் வலிமை தந்து ஆரோக்கிய வாழ்வு தரும் விளையாட்டுக்கள் தான் நல்லது. அது திடகாத்திர முள்ள சமுதாயத்தை உருவாக்கும். சீட்டாட்டம் போன்ற சூது விளையாட்டுக்கள், கொலை, களவு முத லிய தீமைகளை உண்டாக்குவதோடு, குடும்ப அமைதி யைக் கெடுத்து, பொருளாதாரத்தைச் சீரழித்து, வறு மையை உண்டாக்கி, வளர்ச்சியைக் குன்றச் செய்து சமுதாயத்தைக் கெடுத்து, நாட்டைப் பாழாக்கி விடும். ஆகையால் தீமையான விளையாட்டுகள் வேண்டாம்.

இதோ பாருங்கள்! சீட்டாடுபவர்களை! போலீஸ்காரர்கள் பிடிக்கின்றார்கள். (போலீஸார் சீட்டாடுபவர்களைப் பிடிக்கின்றார்கள்). ஆம்! சமூக விரோதிகள்! சட்டத்திலிருந்து தப்ப முடியாது! தப்பவும் விடக் கூடாது. அவர்கள் தண்டனை மூலம் திருந்த வேண் டும். அவர்கள் செய்த குற்றம் மிகப் பெரிதல்ல என்று எண்ணுதீர்கள். அது சமுதாய வளர்ச்சியைத் தடை செய்யும் காரியம். ஆகையால் பாதிக்கும் சக்தி யை அகற்றி நம்மை நாம் காத்துக்கொள்வோமாக (போலீஸாரும் கைதிகளும் போகின்றார்கள்).

## காட்சி|9

**இடம் :** வைத்திலிங்கம் வீடு.

**நிலை :** காவேரி அழுதுகொண்டு வருகிறாள்.

**கா :** அண்ணே . . .

**வை :** என்ன காவேரி . . . அடிச்சுப்போட்டுட்டானு . . . ஹும்.

**கா :** இல்லேண்ணே . . . அவரை போலீசுக்காரங்க கூட்டிக்கிட்டுப் போராங்க.

**வை :** யாரை மன்னுரையா.

**கா :** ஆமண்ணே. சீட்டுப்போட்டாங்களாம், அதுக்காகப் புடுச்சிக்கிட்டுப் போராங்க.

**வை :** சீட்டுப் போட்டானு ? அப்ப வேணும்.

கா : அய்யய்யோ . . . ஒனக்கு நல்லாயிருக்கா. போலீஸ் டேசன் போயி நம்ம ஆளுக நின்னுருக்காகளா. . .

வை : கச்சேரிக்கி போறதுமில்லே, கைகட்டி நிக்கிறதுமில்லெ. சூதாடினு விட்டுடுவாங்களா.

கா : சூதாடினு இவுகளுக்கு யென்னவாம். அவரு வீட்டுப் பணத்தை அவரு ஆடுராரு.

வை : ஆடுவாரு, ஆடுவாரு. அது தான் மாட்டிக்கிட்டா ருல்ல. கெட்ட கழுதைக்குப்பட்டது ஆதாயம்.

கா : நல்லாருக்கு நீ பேசுறது. கட்டின புருசனைக் கச்சேரிக்கி அனுப்பிப்பிட்டு, நாங்கள் கலங்கி நிக்கிறது ஒனக்கு சம்மதமாயிருந்தாச்சரி. இன்னேரம் . . . அப்பா இருந்தா சும்மாயிருப்பாரா. என்னமோ என் விதி ஆத்தா அப்பனே முழுங்கிப்பிட்டு, இப்ப அனுதியாட்டமா கண்கலங்கி நிக்கிறேன். பொறந்த எடமுமில்லே. போன எடமும் பொட்டலாப் போச்சு.

வை : இந்தாபாரு காவேரி. எதுக்காக இப்பிடி நீ அழுகிறெ. நானுந்தான், நல்ல படியா வந்திடுவான் குடும்பமும் வெளங்கும் நல்லாயிருக்குமின்னு பாத்தேன். அடங்காத பய என்னைச் சட்டை பண்ணலியே.

கா : கேக்கலே . . . கேக்கலே, கேக்கலேன்னு சொன்னுப் பிலெ சரியாப் போச்சா. என்னமோ . . . கெட்ட வன் நல்லவனு வந்திடமாட்டானு. ஊர்லே ஒலகத் திலே . . மச்சான் மாமன்னுயிருந்தா ஒத்தாசை செய்ராங்க. என் விதி இப்பிடி போட்டிருக்கு.

வை : இந்தா காவேரி . . . . என்னயிது . . எதுக்கு இப்பிடி அழுகிறே. நானென்ன செய்ய முடியும். சீட்டாடி செயிலுக்கு போரதுக்கு நீ ஒப்பாரி வச்சாப்பிலே சரியாப் போகுமா. . . . . நீ இப்படி அழுதா ஊருலே யிருக்கவுங்க என்ன மோன்னு நெனேச்சு ஓடி வரப்போராங்க. இப்ப . . . என்ன செய்யணும் . . செய்யிறேன் சொல்லு . . .

கா : எப்பிடியாச்சும் எம் புருஷனே கூட்டியாந்திடு.

வை : எப்பிடி முடியும் . . . கோவிச்சுக்கிட்டா போயி யிருக்கான் கூட்டியார. போலீசுக்குப் போனவனே எப்பிடி கூட்டியாரது.

**கா :** அவரோட சீட்டாடின காருவாரு கந்தப்பனே கூட்டி யாரப் போயிருக்காங்களாம். அபராதம் போடுவாங் களாம். அதைக் கட்டினு கூட்டியாந்திடலாமின்னு சொல்ராங்களே.

**வை :** அபராதமின்னு பணத்துக்கு எங்கே போறது. அப்பாவ சம்பாரிச்சி வச்சிருக்காரு. இல்லெ நாஞ்சாம் பாரிச்சு மூட்டை கட்டி வச்சிருக்கேனு.

**கா :** கொடுக்க இஷ்டமில்லாம சாக்குப்போக்கு எஞ் சொல்றே.

**வை :** அப்ப நான் பணம் வச்சிருக்கேனு.

**கா :** மாடு வாங்க மாத்திரம் பணமிருக்காக்கும்.

**வை :** அது சர்க்கார் மாடு வாங்க கடனுக் கொடுத்ததில்லெ. அதை வேரெ செலவு செய்ய முடியுமா. இன்னம் ஒரு வாரத்திலே மாடு வாங்கி அவங்க கிட்டே காட் டணும். (உபாத்தியாயர் வருகிருர்.) வாங்கையா கும்பிடுகிறேன்.

**உபா :** காவேரி . . . எம்மா ஒரு மாதிரியா இருக்கே.

**வை :** அதுங்க . . . எம் மச்சான் மன்னுருல்ல . . .

**உபா :** தெரியுமெனக்கு. நீங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். மாடு வாங்க கொடுத்த பணத்திலிருந்து அபராதம் கட்டி, கூட்டி வரச் சொல்கிருள் காவேரி. . .

**வை :** ஆமங்க. இது நல்லாயிருக்கா.

**உபா :** . . . காவேரி உன் கணவன் செய்த குற்றத்திற் காக நிரபராதியான உன் அண்ணனையும் குற்றவாளி யாக்கலாமா ? உன்னுடன் பிறந்த அண்ணன். உன் இரத்தத்தின் கலப்பு, உன் நன்மைக்காகப் பாடுபடும் ஜீவன், குற்றவாளிக் கூண்டிலே நிற்பதை நீ சகிப்பாயா. ஏதோ போதாத காலம் உன் கணவன் குற்றம் செய்தான். சிறை அவன் சிந்தையை மாற்றலாம் திருந்துவான். காவேரி நான் சொல்வதைத் தவருக நினைக்கின்ருயா ?

**கா :** இல்லேங்க. . . . .

**உபா :** உனக்காவது ஒரு கணவனிருக்கின்றான். உன் அண்ண னுக்கு யாரிருக்கிறார்கள். அவன் நம்பிக்கை தான் அவனுக்கு வாழ்க்கை. அவன் வாழ்ந்தால் தான் உனக்கு நல்லது. ஏன் ஒரு விவசாயியின் நல்வாழ்வு தான் நாட்டின் வாழ்வு! காவேரி உன் அண்ணனே தப்பாக நினைக்கமாட்டாயே.

**கா :** சாமியாணேயா நெனேக்கமாட்டேங்க.

**உபா :** வைத்திலிங்கம் . . . . இனிமேல்தானப்பா உனக்கு நல்ல காலம்.

**வை :** என்னங்க சோசியராட்டமா சொல்றீங்க.

**உபா :** எதுவாயிருந்தாலென்ன. மாடு மாடின்னு அலேஞ்சி யே. . . . உனக்காக நம்ம கிராம சேவக்கையா ஒரு ஜோடி மாடு பாத்து வெலே பேசி வச் சிருக்காராம்.

**வை :** அவரு நல்லாயிருக்கோணுங்க.

**உபா :** நீ நல்லா யிருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவர் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். அதோடு இன்னுமொரு விஷயம். இந்த ஊரிலே முதியோர் கள் படிப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பாடாகி யிருக்கிறது.

**வை :** அப்படின்னு நானும் படிச்சிக்கிறேனுங்க.

**உபா :** நீ ஏற்கனவே கொஞ்சம் படித்திருக்கிறாயல்ல.

**வை :** ஆமங்க மூணுவது வரைக்கும் முந்தி படிச்சேன். அழகர் வர்ணிப்பெல்லாம் ராகத்தோட படிப்பேங்க.

**உபா :** ரொம்ப நல்லதாப் போச்சு. சீக்கிரம் முன்னேற்ற மாகப் படித்துவிடலாம். இன்னொரு நல்ல செய்தி.

**வை :** என்ன சொல்லுங்க. இன்னேக்கி நல்ல நல்ல சேதி யாக் கேக்கிறேனே. நல்ல காலந்தான் பொறந் திருச்சோ.

**உபா :** ஏன் சந்தேகம் அதுதான் எப்பொழுதோ பிறந்து விட்டதே ! அதை நீ அறிந்துகொள்ளாமலிருந் தாய். போகப் போகத் தெரிந்து கொள்வாய். அதா வது பெண்கள் சிறு கைத்தொழிலில் பயிற்சிபெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

**வை :** பெண்களுக்குக் கூடவா.

**உபா :** பெண்கள்தானப்பா நாட்டின் கண்கள்.

**வை :** என்ன தொழிலுங்க.

**உபா :** நூல் நூற்றல், பாய் பின்னுதல், கூடை பின்னல், தையல் வேலை, பூ வேலை முதலிய தொழில்கள்.

**வை :** இதெல்லாம் சொல்லிக் கொடுக்கிறது யாரு.

**உபா :** சமூகக் கல்வியதிகாரிகள். பெண்களுக்கு பெண்ணதி காரி.

**வை :** அப்ப நம்ம காவேரி..

**உபா :** நன்றாகப் படித்துக் கொள்ளலாம். பெண்கள் ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டால் மற்றவரை தன் பிழைப்புக்காக எதிர் பார்த்திருக்கவேண்டியதில்லை.

**கா :** அப்ப என்னையும் சேத்துக்கச் சொல்லுங்கையா.

**உபா :** ஓ தாராளமாக . . . . என் மகள் . . .

**வை :** ஊர்லே என்னமோ படிக்கிதுன்னீங்களே.

**உபா :** ஆமா. தையல் வேலை செய்ய நன்றாகக் கற்றிருக் கிறது. அதை இங்கே வரவழைத்து உதவி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன்.

**வை :** நீங்க நல்லாயிருக்கணும் நம்ம காந்தியாட்டமில்ல பேசுறீங்க.

**உபா :** அந்த மகான் காட்டிய வழிதானப்பா இது !

## காட்சி 10

**இடம் :** வாத்தியார் வீடு.

**நிலை :** வாத்தியார் எதோ எழுதிக் கொண்டிருக்கிறார். அப்போது மா.மூவும் இருளப்பனும் வருகின்றனர்.

மா.மு. : வாத்தியாரய்யா வணக்கமுங்க.

உபா : வணக்கம், வாங்க வாங்க, ஏது இப்படி.

மா.மு. : உங்களைத் தனியாப் பார்த்துப் பேசணும்னுதான் வந்தேன்.

உபா : அப்படியா என்ன விஷயம் ?

மா.மு. : வேறே ஒண்ணுமில்லே, நான் கொஞ்சம் விஷயந் தெரிஞ்சவ பாருங்க. நீங்க எங்களைப்போல உள்ளவங்களைக் கூட வச்சிக்காம இந்த வைத்திப்பயலை சேத்துக்கிட்டு இருக்கிங்களே. நேத்து பேஞ்ச மழையிலே மொழச்ச கீரை—அவனுக்கு என்னங்க தெரியும்.

இருளா : எங்களை மாதிரி பேசத் தெரியுமா ?

மா.மு. : அவன் தனி ஆளு. நாங்க ஒரு கூட்டமே இருக்கோம். அவனுக்கு ஒரு காணி நிலமும், ஒரு ஜோடி மாடுந் தவிற வேற ஒண்ணுங் கிடையாது. ஒரு நாளைக்கு உழைக்கலேன்னு சோத்துக்கே திண்டாட வேண்டியது தான்.

இருளா : ஆமாங்க நாங்க வேலை செய்யாமலே சாப்பிட்றதுக் குண்டான வழிகள் பல செய்து வச்சிருக்கோம்.

மா.மு. : நான் கொஞ்சம் விஷயந் தெரிஞ்சவ பாருங்க. நீங்க எங்களுக்கு அனுசரணையா இருந்தா உங்களுக்கு எவ்வளவோ சௌகரியமிருக்கு. இதை விட்டுட்டு அந்த ஒண்ணுந் தெரியாத பயலுக்கு ஆதரவு கொடுக்கிறீங்களே. சர்க்கார்லே கடன் பண உதவி கொடுக்காங்களே. அதுகூட அவனுக்கே வாங்கிக் கொடுத்திருக்கீங்க. எங்களுக்கும் அப்படி நீங்க வாங்கிக் கொடுக்கக் கூடாதா.

உபா : பணம் வாங்கிக் கொடுக்கிறது என் சொந்த அபிப்பிராயம் மட்டுமல்ல. கடனு வாங்கின பணத்தை வீண் செலவு செய்ய மாட்டிங்கன்னு அதிகாரிகள் நம்பும்படியா உங்க நடத்தை இருந்திச்சின்னு அவங்களே கொடுக்கிருங்க, என் சிபார்சே தேவையில்லையே.

மா.மு : வாத்தியாரய்யா, வார்த்தையை அளந்து பேசுங்க, அந்த வைத்தியலிங்கம் யோக்யன். நாங்க அயோக்யன். அப்படித்தானே. நீங்களும் அவனும் சர்க்காரு தத்துப் புள்ளேங்க. நாங்க மட்டும் வேண்டாதவங்களோ. இந்த சர்க்கார் பணம் யாருக்கு வேணும்.

(வாத்தியார் உள்ளே போதல்.)

இருள : நம்மள அவமானப் படுத்தின் வாத்தியாரை லேசிலே விடக்கூடாது.

மா.மு : கவலைப்படாதே. நான் கொஞ்சம் விஷயந் தெரிஞ்சவன் பாரு. வரட்டும், வரட்டும் தேர்தலும் சமீபத்திலே தானே வருது. இவங்க காலே வாரி விட்டுட மாட்டேன். நம்ம ஆளுரெண்டு பேரு உள்ள போதும். கண்ணுலே விரலே விட்டு ஆட்டிடமாட்டேன் ஆட்டி. (என்று சொல்லிக் கொண்டு போக எதிரே யோசனே செய்து கொண்டு வந்த தரகர் மா.மு. வின் கண்கள் பக்கத்தில் பட்டு விடுகிறது.)

மா.மு : எம்ப்பா ஆள் வர்றது தெரியலே. பாத்து வரக்கூடாது, கொஞ்சந்தவறியிருந்தா என் கண்ணுல்லே போயிருக்கும்.

இருள : எய்யா நாங்க அடுத்தவங்க கண்ணுலே விரலே விட்டு ஆட்டனும்னு திட்டம் போட்டுகிட்டு வர்ரோம். நீ எங்க கண்ணுலேயே விரலே விட ஆரம்பிச்சிட்டேயே, உன்னே . . . . . .

தர : அய்யா படி இருக்கு தடுக்கி விழுந்திடாதீங்க. பாத்து போங்க.

(போனபின்.)

நல்ல ஆளுங்கடா இவுங்க, கண்ணேக் குத்தவும், காலே வெட்டவும், கையை ஒடிக்கவுமே சதா யோசனே பண்ணி வேலே செய்வாங்க போலிருக்கு. (வந்து)

உபா : என்ன தரகரய்யா ஆத்ம ஹதம் பேசிகிட்டு வர்றீங்க?

தர : ஒண்ணுமில்லே உங்களே ஒரு முக்கியமான விஷயத்துக்காக ரெண்டு மூணு தடவை பார்க்க வந்தேன். முடியலே.

உபா : என்ன செய்றது வேலேத் தொந்தரவுதான்.

**தர :** இருந்தாலும் சொந்த விஷயத்தையும் கவனிச்சுக் கிடனுமில்லே.

**உபா :** விஷயத்திலே வேறுபாடு காமிக்கிறது விவேகம் உள்ளவங்க செய்யிற வேலே இல்லிங்க. வந்த விஷயத்தைச் சொல்லுங்க.

**தர :** உங்க பரந்த உள்ளத்துக்குத் தகுந்தபடி நல்லா படிச்சவனுகவும் பரம்பரையா கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவனுகவும் ஒரு பையனே பார்த்து வைச்சிருக்கேன். பையனும் நல்லா எலுமிச்சம் பழம் மாதிரி தளதளன்னு கண்ணுக் கழகா இருக்கிருன். கண்யமா பேசுருன். ரொம்ப அடக்கமான பையன் அவன் படிப்புக்கு இது வரைக்கும் 10, 20 ரூபாய்க்கு மேலேயே ஆயிருக்காம், பெரிய ரூபாய்க்கு. அவன் இன்னும் மேலே படிக்கணும்னு சொல்ருனும். அதுக்கு இப்ப ஒண்ணும் அவசரமில்லே. இது வரையிலும் செலவழிச்ச பணத்திலே ஒரு பாதியாவது கொடுக்க வேண்டாமா ? உங்களேப்பத்தியும் நம்ம பொண்ணே பத்தியும் சொல்லி ஒரளவு சம்மதிக்க வச்சிருக்கிறேன். ஒங்க அபிப்ராயத்தை சொன்னீங்கன்னு முன்னே பின்னே ஏதோ பேசி முடிச்சிடலாம். நீங்க என்ன சொல்றீங்க.

**வாத் :** சொல்றதுக்கு ஒண்ணுமில்லே பொண்ணேயும் கொடுத்து மேற்கொண்டு பணமும் கொடுக்க வேண்டியதிருக்கேங்கிறதைப் பத்தி. . . . .

**தர :** ஒண்ணும் நெனேக்காதீங்க, பணத்தைப் பாத்தா பொண்ணு வாழ்வு என்னுகிறது. கல்யாணமாகாம இருந்தா நமக்கு மனக் கஷ்டந்தானே.

**வாத் :** கல்யாணமாகமெ பொண்ணு இருக்கிறது நமக்கு எவ்வளவு கஷ்டமோ இது போல பையன் கல்யாணமாகம இருந்தா அவங்களுக்கு சங்கடந்தானே. அதை நெனேச்சுப் பாருங்க. மேலும் 5 ஆயிரம் 10 ஆயிரத்துக்கு எங்கே போகிறது.

**தர :** ஆச்சர்யமா இருக்குதுங்க. பணத்தைப் பத்தி உங்களுக்கும் கவலேயா ? வாய் திறந்து நீங்க கேட்டா லக்ஷ லக்ஷமா கொடுக்க எத்தனேயோ பேரு காத்துக் கிட்டிருக்காங்களே. மேலப்பட்டி மிராசுதாருக்கு விஷயம் இப்படின்னு தெரிஞ்சாலே நீங்க கேக்கிறதுக்கு முன்னுடி கொடுப்பாரே, உங்களாலேயா புரட்ட முடியாது.

(இந்த நேரத்தில் தனம் வந்துவிட்டுப் போகிருள்.)

**வாத்தி :** ஐயா இந்த புரட்டு செய்கிறதெல்லாம் எனக்குப் புடிக்காது. ஏதோ ஜனங்களுக்கு தேசமுன்னேற்ற சம்மந்தமா எனக்கு தெரிஞ்ச விஷயங்களை எடுத்துச் சொல்லி என்னாலே புடிஞ்ச தொண்டை செய்துகிட்டு வர்றேன். எம்மகளுக்கு கல்யாணம் ஆகலேன்னாலும் பரவாயில்லை. வரதக்ஷணை கொடுத்து கல்யாணம் செய்து வைக்கத் தயாரா இல்லை. கல்யாணத்தை வியாபாரமா நான் கருதலே.

**தர :** கண்டிப்பா பேசுறீங்களே காரியம் முடியருப்பிலே பேசுங்க.

**வாத்தி :** நான் உங்ககிட்ட முன்னே சொல்லியிருக்கிறது போல பையன் இருந்தா சொல்லுங்க. இல்லேன்னா விட்ருங்க.

**தர :** சரி நான் வர்றேங்க.

(தரகர் போகிறார்.)

**உபா :** பணம் பணம்னு அலையிருங்க 5 லக்ஷம் ரூபா கிடைக்கு துன்னா படிச்சவ பிசாசைக்கூட கட்டிக்குவான் போலி ருக்கே. நல்ல உலகம்டா.

(தனம் வந்து)

**தனம் :** அப்பா! அப்பா நீங்க பேசிக்கிட்டிருந்ததை யெல் லாம் கேட்டுகிட்டுத் தானிருந்தேன். என் கல்யாணத் துக்காக கவலைப்படாதீங்க. நான் இப்ப சந்தோஷ மாத்தானிருக்கேன். இந்த குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் பெண்களுக்கு தையல் சொல்லித் தருவதிலும் நேரம் போவதே தெரிய வில்லை. அதனாலே மெதுவா பாத்துக்கலாம்.

**உபாத் :** ஒன்னைப் போல ஒவ்வொரு குடும்பத்திலேயும் பெற் றோர்களுடைய மனசறிஞ்சு நடக்கிற பெண்களா யிருந்தா பெற்றோர்களுக்கு எவ்வளவு சந்தோஷ மாயிருக்கும்.

(பிள்ளைகள் வந்ததும்)

சரியம்மா உன் வேலையைப் பார் நான் வர்றேன்.

## காட்சி 11

**இடம் :** டாக்டர் வீடு.

**நிலை :** டாக்டரும் உபாத்தியாயரும் உட்கார்ந்திருக்கின்றனர்.

**டாக்டர் :** அலேச்சல் அதிகம் போலிருக்கு.

**உபாத்தியாயர் :** என்னங்க பிரமாதம். . . . . .

**டாக் :** சும்மாவா சுத்துறீங்க. பேரும் புகழுமல்ல வருது. எங்கே பாத்தாலும் உங்க பேச்சாத்தானே யிருக்கு.

**உபா :** டாக்டர் சார். நீங்கள் தவருக நினைக்கிறீர்கள். சேவைக்குப் பிரதி பலனே கிடையாது. பிரதி பலனைக் குறித்துச் செய்வதும் சேவையல்ல. தூய்மையான சேவையாளர்களை புகழ் பின் தொடரலாம். ஆனல் அதைத் திரும்பிப் பார்த்தால், அது காரியுமிழ்ந்து மறைந்து விடும்.

**டாக் :** நன்ருகப் பேசுகிறீர்கள். போகட்டும், முதியோர் பள்ளிக்கூடம் இப்பொழுது எப்படியிருக்கிறது.

**உபா :** நன்ருக முன்னேறி இருக்கிறது. அதிகமான பேர் ஆவலோடு படிக்கிருர்கள்.

**டாக் :** ஆரம்ப சூரத்தனம்.

**உபா :** இல்லே . . . . மக்களின் உண்மையான பிரதி பலிப்பு! அதைக்கருத்தோடு பேகணிக் காப்பாற்றி வளர்த்தால், வளரும் மகத்தான சக்திதான் இந்த நாட்டின் முன்னேற்றம். இதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டுமானல் என்னுடன் வாருங்கள். முதியோர் பள்ளியொன்றையே உதாரணமாகக் காட்டு கிறேன்.

**டாக் :** நீங்கள் மிகவும் சமத்தான ஆளய்யா. போகட்டும் உங்கள் பிரதம மாணவன் எப்படி யிருக்கின்ருன்....

**உபா :** யார் வைத்திலிங்கத்தைக் கேட்கிறீர்களா.

**டாக் :** ஆமா சார்.

**உபா :** காந்திமகானின் சத்திய சோதனையை ஊன்றிப் படிக்குமளவிற்கு வளர்ந்திருக்கின்ருன்.

**டாக் :** என்ன !. . . . . பத்துமாதத்துக்குள்ளாகவா !

**உபா :** சந்தேகமில்லாம—இந்த கிராமத்தின் வளர்ச்சிக்கு வைத்தியலிங்கத்தின் முன்னேற்றமே ஓர் எடுத்துக் காட்டாகும்.

**டாக் :** சரி சார்—உங்க பெண் கலியாண விஷயமா ஏதாவது யோசனை செய்திங்களா ? காலாகாலத்தில் செய்திட வேண்டாமா ?

**உபா :** செய்யவேண்டியதுதான். நான் என்ன முயற்சி பண்ணுமலா இருக்கேன். எதுக்கும் நேரங்காலம் வரவேண்டாமா? உங்க வகையில் ஏதாவது மாப்பிள்ள இருந்தா சொல்லுங்க.

**டாக் :** ஓ. அவசியம் சொல்றேன். அதில எனக்கும் கடமை இருக்குங்கள்லே—சரி முதியோர் பள்ளிக்கூடத்தைப் பார்த்துவிட்டு வரலாமா ?

**உபா :** போவோம்.

## காட்சி 12

**இடம் :** ஆற்றங்கரை.

**நிலை :** ஜன நடமாட்டம் குறைந்த இடத்தில் தனம் தனிமை யாக, தாழ்ந்த குரலில் பாடிக்கொண்டிருக்கிருள். இழந்த வாழ்க்கையின் ஏக்கமும் சோகமும் கலந் திருந்தது பாட்டில். காவேரிவருகிருள்.

**தனம் :** யார் !. . . . . காவேரியா. . . . . ஏது புது சாயிருக்கு சாயங்காலத்திலே இந்தப் பக்கம்.

**க்காவேரி :** ஒண்ணுமில்லையம்மா. . . . .

**தனம் :** பார்த்தாயா ஆரம்பித்துவிட்டாயே. அம்மாவா நான். தனமின்னே கூப்பிட்டா என்ன ? அப்பிடிக் கூப்பிடுவதுதான் எனக்குப் பிரியமாயிருக்கும். நானென்ன உன்னைக் காட்டிலும் மூத்தவளா.

**கா :** இல்லேம். . . மா. . . எப்படியிருந்தாலும் நீங்க எனக்கு வாத்தியாரு. உங்களை பெயரைச் சொல்லிக் கூப்பிட நாக்கு வரமாட்டேங்கிது. என்னைக் காட்டிலும் நீங்க எவ்வளவோ சிருசுதான்.

**தனம் :** சிருசுதானே. அப்பத் தனமின்னே கூப்பிட னும். . . சரியா. ஏன் ஒரு மாதிரியாயிருக்கே. காலேயிலிருந்தே சரியாயில்லேயே.

**காவே :** என்னமோ அடிக்கடி சங்கடமாவெ இருக்கம்மா.

**தனம் :** எனக்கு எல்லாந்தெரியும் காவேரி. உன் புரு சனே நினேச்சுத்தானே கவலேப்படுகிருய்.

**காவே :** ஆமம்மா . . பாவி மகன் சொல்லுக் கேக்காமெ அடம் பண்ணிறனே தவிர எளக்க மனசுக்காரம்மா, பொல்லாத காலம், பூனே புலியாச்சு . . ஒரு நல்லது கெட்டது உண்டா. (கண்கலங்கியபடி) வீட்டிலெ கூழுக்கிண்டிறு குடிக்கமாட்டாது. பட்டாளத்திலெ ரொட்டியும் பாலுமாக் குடிச்சது. நல்லாத் தின்னு வளந்தது. இப்ப என்ன பண்ணுதோ. ஒரு சீக்குச் செரங்கின்னு யாரு இருக்கா பாக்கிறதுக்கு. கல்யாணம் பண்ணி என்ன பொதியைப்புடுச்சுது. என்னமோ செயிலுக்கு போருப்பிலெ வந்திடுச்சு. வந்தாத் தான் என்ன, தண்டனே முடிஞ்சதும் ஊருக்கு வரப் பிடாதா . . . வருவாரு வருவாருன்னு நாளே எண்ணி வீணுப்போச்சு.

**தனம் :** தண்டனே முடிஞ்சதும் எங்கே போனரு.

**காவே :** எங்கே போச்சுன்னு யாருக்குத் தெரியும். ரோஸக்கரை பாவிமவன், ஆத்திலெ கொளத்திலெ விழுந்து செத்துச்சோ . . ஆண்டவனுக்குத் தான் தெரியும். என்னதான் இருந்தாலும் நல்லது பொல்லாதைத் திங்கிறதின்னு நஞ்சைத் திங்கிருப் பிலெயிருக்கு.

**தனம் :** மனசை அலட்டிக்காதே காவேரி. எப்பிடியும் கொஞ்ச நாள் போனுல் வந்து விடுவார்.

**காவே :** வருவாரு வாருவாருன்னு எவ்வளவு நாளாத் தான் பார்க்கிறது. ஊம் இருக்கட்டும்.

**காவே :** மனசை மாத்திக்கிட்டு வேரே பேச்சுப் பேசுங்க. நேத்திக்கி....நான் தச்ச சட்டையை எங்க அண்ணன் போட்டுப் பாத்துப்பிட்டு, ரொம்ப நல்லாயிருக்கேன்னு சொல்லுச்சு.

**தனம் :** ஆமா ஒங்க அண்ணன் நல்லாப்படிச்சுக்கிட்டாரா மில்லெ. கூட்டத்திலே எல்லாம் பேசுராராம்.

**காவே :** ஆமா. இப்ப இங்கிலீசெல்லாம் சொல்லுதுங்க.

**தனம் :** இங்கிலீஷ் கூடவா.

**காவே :** அதோட வா . . இன்னும் ஏதோ படிக்கணம்னு சொல்லுது. அது பேருதான் வரமாட்டேங்கிது.... அது . . அது . . பூப் . . பூந்தி ! பூந்தி !

**தனம் :** (சிரித்தவாறு) அட நீ யொன்னு. ஹிந்தி !..ஹிந்தி யின்னு சொல்லு.

**காவே :** அது என்னமோம்மா . .

**தனம் :** சொல்லுன்ன. ஹிந்தி.

**காவே :** இந்தி. இதெல்லாம் அப்புறம் சொல்லித்தாங் கம்மா. இப்பவே எல்லாத்தையும் சொல்ல முடியுமா.

**தனம் :** போகப் போக, நீயும் நல்லாத் தமிழ் படிச்சுக்கிட்டா . . . இங்கிலீஷ், ஹிந்தி எல்லாம் படிக்கலாம்.

## காட்சி 13

**இடம் :** சாலையோரம்.

**நிலை :** மாமுண்டியம்பலம், இருளப்பன், காத்தன் முதலானோர் பேசிக்கொண்டிருத்தல்.

**இரு :** இந்தா பாருங்க அம்பலகாரய்யா. இன்னமும் அந்தப் பயலை வாலாட்ட விட்டோமோ நம்மபாடு திண்டாட்டந் தான்.

**மா :** இருளப்பா, எல்லாம் எனக்குத் தெரியும். என்னைக்கி மஞ்ச வெரட்டிலெ ஏமாட்டைத் தொட்டுப் புடுச்சானோ அன்னைக்கே அவனுக்குப் புடுச்சுது சனி.

**கா :** பந்தயமில்லெ கட்டிப் புடுச்சானும். மாமுண்டியம்பல கார வீட்டு மாட்டைப் புடிக்கலெ எம்பேரை மாத்தி வச்சுக்கூப்பிடுன்னு சவால்ல விட்டான்.

**மா :** ஏன் விடமாட்டான் சவால் ஏதோ ரெண்டெழுத் துப்படிச்சுகிட்டோமிங்கிற திமிரு.

**கா :** படுப்பும் கத்துக்கிட்டான், வயவரப்பு வேலேயும் விடாமெ செய்கிருன். அந்த கிராம சேவக்கையா ஒதவியை வச்சிக்கிட்டு என்னமோ சப்பான் சாகுபடியின்னு புது மாதிரியாவில்ல பயிறு பண்ணியிருக்காணும்.

**இரு :** எல்லாஞ் செய்வாண்டா. நாம இப்படி கல்லுப்பிள் ளேயாராட்டமா குந்திக்கிட்டு இருந்தா . . என்னேக்கி மாமுண்டி அய்யா வீட்டு மாடுன்னு தெரிஞ்சிருந்தும் துணிச்சலா புடிச்சாளே அவனுக்குச் சரியான புத்தி குடுக்கலெ, அவன் இத்தோட நிக்க மாட்டான். . . இன்னமே . . அந்த . . மஞ்ச வெரட்டுக்காளே வெலேப் போகுமா. மாடு புடிபடுறதுக்கு முன்னுடி நான் நீயின்னு வெலே கேட்டு வந்தாங்க . . இப்ப என்னு கேக்க நாதியில்லேயே.

**கா :** இன்னமே வெலேப் போகுமா அந்த மாடு.

**இரு :** மஞ்ச வெரட்டுக்கு முன்னுடி நல்ல வெலேக்கில்லெ கேட்டாக.

**கா :** பணம் போச்சு.

**மா :** எங்கடா போகும். இந்த மாமுண்டியம்பலம் நெனேச் சேன்னு, பத்துக்கு நூரு வசூலுப்பண்ணுவேண்டா. சனியம் புடுச்ச நாரை கெளிரைப்புடுச்சு முழுங்கிச் சின்னு என் வெவகாரத்திலெ கை வச்சிருக்கான்.

**இரு :** பெரியவங்க சின்னவங்க யிங்கிற மருவாதி யில்லே. தலேக்கித் தலேயம்பலம். கெட்டுப்போச்சு. காலம் கெட்டுப்போச்சு.

**மா :** எல்லாம் அந்த வாத்திப்பய வந்து காலடி வச்சான் இந்த வைத்திப்பய தலே கால் தெரியாமெ குதிக் கிருன்.

**கா :** காட்டுக் குச்சியை எடுத்து மாட்ட ஓட்டிற பயலுக் குப் பவிசிலெ வந்திருக்கு பவிசு. எங்கெ பாத்தா லும் வைத்தி வைத்தியின்னு தூக்கிக்கிட்டுல்லெ ஆடுராங்க.

**இரு :** மாடு ஒரு சோடி வாங்கிக்கட்டியிருக்கான்.

**கா :** அது சர்க்காரு கொடுத்த பணம். வக்கத்த பயலுக்கு வேறே நாதி.

**இரு :** இப்பக் கூட்டங்கள்ளெ கூட பேசுராணுமில்லெ.

**கா :** ஹாம் . . என்னத்தையிடா பேசிரான். எடுத்தெதுக் கெல்லாம் ஐந்தாண்டுத் திட்டம் ஐந்தாண்டுத் திட்ட மின்னு தான் கத்துரான், என்னமோ எல்லாந் தெரிஞ்சவனுட்டமா.

**மா :** இவந்தானே ஊருக்குப் பெரிய மனிசன். போக்கத்த பய. இன்னைக்கெல்லாம் போட்டு அடிச்சாலும் . . என்னு கேக்க நாதியில்லெ. நரிக்கி நாட்டாமை குடுத்தா கெடைக்கி ரெண்டு ஆடு கேக்குமாம்.

**இரு :** என்னமோ அரிசனங்களுக்கு சேவை பண்ணுரோ மின்னு . . அந்தச் சேரிப் பயகளைக் கட்டிக்கிட்டு அழுகிருன். அந்தப் பொறுக்கிப் பயகளும் இவனை மொய்க்கிருங்க.

**கா :** அதோடவா . . அவுங்களுக்குப் பஞ்சாயத்துப் பண்றது. படிப்புச் சொல்லிக் கொடுக்கிறது. இன்னம் என் னமோ வீடு கட்டிக்குடுக்க ஏற்பாடு செய்யப் போராணு மில்லெ.

**மா :** கொஞ்சம் பொறுங்கடா அவன் வாலெ ஒட்ட நறுக் கலெ எம்பேரு மாமுண்டியம்பலமில்லெ.

## காட்சி 14

**இடம் :** தெரு.

**நிலை :** தமுக்கடித்தல்.

**பறை சாற்றுபவர் :** இதனுல் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றுல் : நமது கிராமத்திலே கிராம சேவா சங்கம் அமைப்பதற்காக, இன்று மாலே சாவடியிலே கூட்டம் நடக்க விருக்கிறது. ஆகையால் பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

## காட்சி 15

**இடம் :** கிராமச்சாவடி.

**நிலை :** கிராம சேவக்கின் தலைமையில் மக்கள் திரண்டிருக் கின்றனர்.

**கிராம** சேவக் : பெரியோர்களே ! ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. " கடவுள் மனிதர்களைப் படைத்தார், மனிதர்கள் கிராமங்களைப் படைத்தார்கள் " என்று.

இப்பொழுது இந்தக் கிராமத்திலே, குடி தண்ணீர் வசதி செய்து கொள்ள, முதியோர் பள்ளி நிறுவ, பெண்கள் கைத்தொழில்பயிற்சி பெற, பள்ளிக்கூடம் ஆரம்பிக்க, ஆஸ்பத்திரி கட்ட, ரோடுபோட, கக்கூஸ் கட்ட, வாய்க்கால் வெட்ட, பாலங் கட்ட, பயிர் செய்ய, உரமிட, கோழி, தேனீக்கள் வளர்க்க, கூட்டுறவு முறை பழக, சமூகக் கல்வி பெற, சுகாதாரமாயிருக்க, ஆகிய வசதிகளை ஐந்தாண்டுத் திட்ட உதவியைக் கொண்டு நாம் அடைந்து விட்டோம். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும் !

அடுத்த படியாக, நாம் வெகு நாட்களாக நினைத்த கிராம சேவா சங்கத்தை அமைத்திருக்கிறோம்.

இந்தச் சங்கத்திற்கு ஒரு தலை வரையும் காரிய தரிசியையும் ஐந்து மெம்பர்களையும் தேர்ந்தெடுங்கள். முதலில் தலைவர் . .

**மரு :** காத்தமுத்து சேர்வாரைத் தலைவராயிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**சாத் :** நான் ஆமோதிக்கின்றேன் : (கைதட்டல்).

**கிரா :** இன்னும் யாராவதிருந்தால் சொல்லலாம் . . (மௌனம்) மிகவும் நல்லது . . ஏகோபித்துத் தலை வரைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். அடுத்தது காரிய தரிசி . .

**முனி :** வைத்திலிங்கத்தை பிரரேபிக்கின்றேன்.

**மா :** நான் அதை ஆமோதிக்கின்றேன்.

**இரு :** மாமுண்டியம்பலகாரரை காரியதரிசியாக வேண்டுகிறேன்.

**காத் :** நான் ஆதரிக்கிறேன்.

**கிராம :** சரி . . இதை ஓட்டு மூலந்தான் முடிவு செய்ய வேண்டும். வைத்திலிங்கத்திற்கு ஓட்டுப் போடுபவர்கள் கை தூக்குங்கள் ! . .

(தூக்கியிருக்கும் கைகளை எண்ணுகிறார்) நாற்பத்தி எட்டு. சரி . . . மாமுண்டியம்பலத்திற்கு ஓட்டுப்போடு பவர்கள் கை தூக்குங்கள். (எண்ணுதல்) . . . பதி ஞென்று . . பதி . . அய்யா இங்கே பாருங்க ஒரு கைதான் தூக்க வேண்டும், ஒரு கையைத் கீழே போடுங்கள் . . மொத்தம் பனிரெண்டு . . பெரி யோர்களே! நாற்பத்தி எட்டு ஓட்டுக்கள் பெற்ற வைத்தி லிங்கம் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (கை தட்டல்) அடுத்து ஐந்து மெம்பர்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. பெயர்களைப் படிக் கின்றேன், ஆட்சேபனையிருந்தால் மாத்திரம் தெரிவி யுங்கள். (1) கருப்பணத் தேவர். (2) மருதமுத்து. (3) ஆறுமுகப் பண்டிதர். (4) மாணிக்க வேளார். (5) அப்துல்லா ராவுத்தர் (கைதட்டல்).

## காட்சி 16

**இடம்:** தனத்தின் வீடு.

**நிலை:** காவேரி காய்கறிக் கூடையுடன் வருகிறாள்.

**த:** இதென்ன காவேரி காய்கறிக்கூடையையே தலையிலெ தூக்கிக்கிட்டு வாரெ.

**கா:** என்னம்மா நையாண்டி பண்றீங்க. எங்க தோட்டத் திலெ போட்ட காய்கறி. ஓங்களுக்குக் கொஞ்சம் . .

**த:** அடெ காய்கறிப் பயிர்கூடச் செய்யிரியா.

**கா:** ப்பூ . . இப்பத்தானு ஓங்களுக்குத் தெரியும். காய்கறி பயிர் பண்றதிலெ என்னைப் பீட்டுப் பண்ண முடி யாதுங்க.

**த:** அப்ப ஏன் எங்கிட்டை சொல்லலெ.

**கா:** கொஞ்ச நாளா விட்டுட்டேன். இப்ப நம்ம கிராம சேவக்கையா வந்து நல்ல வெதைங்க வாங்கிக் கொடுத்தாரு.

**த:** ஆமாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே இல்லாத காரியங் களே கிடையாது. நல்ல சத்துள்ள உணவுகளை உண் டால் தானே ஆரோக்கியத்துடனிருக்க முடியும்.

கா : இதைத்தாங்க கிராம சேவைக்கையா அடிக்கடி சொல்லுவாரு சத்துள்ள உணவை அதிக வெலே கொடுத்துவாங்க வேண்டியதில்லெ, நாமே தயார் பண்ணிக்கலா மின்னும் சொல்லுவாரு.

த : உண்மைதான். கோழி வளர்த்தல் மூலம் முட்டைகள் குறைந்த செலவில் கிடைக்கும். மீன் வளர்ப்பதும் அப்படித்தான். இதற்கெல்லாம் கூட்டுறவு முறை தான் ரொம்பச் சிறந்தது. . . . சரி ஒரு நாளைக்கு உன் தோட்டத்திற்கு வரவேண்டுமே . . . .

கா : நாளைக்கே வாங்க.

த : ஆமா. ஒங்க அண்ணன் அங்கே வருவாரோ.?

கா : சாயங்கால வேளேயிலெ அங்கே தானே வந்து படிச்சிக்கிட்டுயிருக்கும்.

த : பூச் செடி வளக்கிறியோ.

கா : ஒன்று ரெண்டு இருக்குங்க. அது எங்க அண்ணன் வச்சது. ஆனு ஒரு பூவைக்கூட பறிக்க விட மாட்டாதுங்க. செடியோட இருந்தாத்தான் நல்லாயிருக்குமாம்.

த : ஆமா. ஒங்க அண்ணு நான் வந்தால் ஒண்ணும் சொல்லமாட்டாரே. . . . ஹூம்.

கா : நல்லாக் கேட்டேங்க. ஒங்களே அடிக்கடி விசாரிக்குமெ. பொண்ணுப் பொறந்திருந்தா நாங்கூடத் தைய வேலே கத்துக்குவேண்ணு சொல்லுது. நீங்க கூட நல்லா அன்பா பேசுரீங்கண்ணு சொல்லுமே.

த : சங்க விஷயமா சில சமயங்களில் பேசுரப்போ ரொம்ப அடக்கமாவும் அன்பாகவும் பேசுவாரு. கெட்டிக்காரர். எங்கிட்டெ சில புத்தகங்கள் கூட வாங்கிக் கொண்டு போயிருக்காரு.

கா : இப்பிடியிருக்கப்ப எங்கிட்டேயே கேள்வி கேக்கிறீங்களே.

த : ஆமா. என் இன்னும் கல்யாணம் பண்ணுமலிருக்காரு

கா : முந்தியெல்லாம் கல்யாணமின்னு பேசிஞ . . . . எரிஞ்சு விழும். . . . . .

த : இப்ப . . .

கா : இப்பக் கல்யாணப் பேச்சுப் பேசிஞ . . . .

த : என்ன சொல்ராரு.

கா : ஆகட்டும் பார்க்கலாமின்னு லேசா சிரிக்கிது.

த : நாளைக்குத் தோட்டத்தைப் பார்க்க அவசியம் வர்றேன்— உங்க அண்ணுகிட்ட கூடச் சொல்லு.

## காட்சி 17

இடம் : சாலையை அடுத்துள்ள தோப்பு.

நிலை : மாமுண்டியம்பலம், இருளப்பன், காத்தன் முதலாஞேர் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

மா : காரியதரிசியா வந்திட்டோமிங்கிற திமிரிலே பேசுராணுக்கும்.

இ : அன்னைக்கி அத்தனை சனக்கூட்டத்திலெ மாமுண்டியம் பலகாரரை எதித்து காரியதரிசியா வாரான்ஞ அப்ப எம்பிட்டு எகத்தாள மின்னு பாருங்க.

கா : ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு மனுசனைக் கடிசாப் பிலேல்ல இருக்கு. முதல்லே மஞ்ச வெரட்டிலே மாட்டைப் புடிச்சான். இப்ப மாமுண்டியம்பலமிங்கிற பயமில்லாமெ எதித்து நிக்கிருன். எல்லாம் நம்ம கொடுக்கிற எளக்காரம். இன்னேரம் பெரிய அம் பல காரராயிருந்தா, அவன் தலையைக் கொத்தி எரிஞ்சிருக்க மாட்டாரு.

கா : டே காத்தா. இந்தச் சிங்கம் பதிங்கியிருக்கிறது, அவனை அங்க அங்கமாகப் பிச்சு எரியத்தாண்டா. போக மாட்டேன் புகுந்திட்டா திரும்ப மாட்டேன். ஒண்ணு அவன் உசுரு, இல்லாட்டி என்னுசுரு. . . என் னண்ணு நெனைச்சே. அடுத்த வாரம் சந்தைக்குள்ளே அவம் பொணத்தை இழுத்துச் சந்தியிலேபோடலெ எம்பேரு மாமுண்டியம்பலமில்லேடா. இந்தா பாரு இருளா (ரகசியமாக) நாஞெரு யோசனை செஞ் சிருக்கேன். நாயித்துக் கெளமை யன்னைக்கி நம்ம களத்திலே இருக்கிற சாமான் எல்லாம் அப்பறப் படுத்தோணும்.

**இரு :** எங்க.

**மா :** நம்ம வைக்கப் போரிலே நெருப்பு வைக்க.

**இரு :** என்னங்க யிது நாமே எதுக்கு நம்ம போரிலே தீ வைக்கணும்.

**மாமு :** கேள்டா. நாமே தீயை வச்சுப்பிட்டு தீதீ யின்னு கத்தோனும். தீயை அணைக்க எல்லாரும் ஓடியாரு வாங்க அப்ப அந்த வைத்திப்பயலும் வருவான்.

**கா :** காரியதரிசியில்ல வராமெ யிருப்பாரா.

**மா :** வந்ததும் தீயை அணைப்பான். அந்தச் சமயத்திலெ நாமளும் சேர்ந்து அணைக்கிராப்பிலெ அவனை நெருப் பிலெ புடுச்சுத் தள்ளிடனும்.

**கா :** ஆத்தாடி செத்துத் தொலைச்சிட்டான்னு.

**மா :** அதுக்குத் தான்டா தீ வைக்கிறது.

**கா :** எப்பிடிங்க ஒருத்தனை உசுரோட புடுச்சுத் தள்றது. பின்னுடித் தெரிஞ்சு போச்சின்னு.

**மா :** போடா கோழை ! . . . . . நீ கத்தாளை வெட் டத்தான்டா ஆவே.

**இரு :** இருந்திருந்தும் அவங்கிட்டெ சொல்றீங்களெ. நாஞ் செய்யிறேன்.

**கா :** ஏப்பா எங்களைக் காட்டிலும் நீங்க பெரிய கேரோ நல் லூருலெ . . . . . நாலு ஆட்டையும் முதுகிலே தூக்கிப் போட்டுக்கிட்டு நாலு தவ்வுலே நாலு குட்டிச் செவரையும் தாண்டி யாந்தவண்டா. புடிக்க முடி யுமா இந்தப் புலியை.

**மா :** ஹும் . . . அப்பிடிப் பேசிடா சிங்கக்குட்டி, யின் னே. இந்தக் காலத்திலே இதுக் கெல்லாம் யோசித்தா பெரிய மனுசனுக முடியாதுடா. நம்மளைக் கண்டு நாலு பேரு பயந்தாத்தான் பெரிய மனிசனுக முடி யும்.

**கா :** யாரு. . . . (திருப்பிப் பார்த்து) யாரோ இந்தப் பக்கமிருந்து போராங்களெ. . . . நாம பேசின தைக் கேட்டிருப்பாங்களோ. . . .

மா : யாரது. . . . . . ஹூம். . . . . .

இரு : அந்த வாத்தியாராட்டமில்ல இருக்கு . . . ஒரு சமயம் நாம பேசினதைக் கேட்டிருப்பானோ.

மாமு : யார்ரா கண்டா. . . . தெரிஞ்சா ஆபத்தில்ல வாத்திப்பய பொல்லாதவண்டா. . . . வைத்தி ப்பயலுக்கு ரொம்ப வேண்டியவன்.

இரு : அது நிச்சயம் கேட்டுத்தானிருப்பான். . . . அந் தாபாருங்க திரும்பித் திரும்பி பாத்துக்கிட்டு வேக மாப் போரான்.

மாமு : இவனும் நம்ம எதிரிப்பயதான். . . . என்ன ஆனாலும் சரி. . . . இவனே இப்பவே புடுச்சு மடக்கிட்டா இப்பிடியே தொடர்ந்து போயி, அந்த ஆத் துப்பாலத்துக் கிட்டெ போரப்ப, புடுச்சு மடக்கி ஆத்தி லே தூக்கி எரிஞ்சிட்டா.

கா : பக்காவான யோசனேங்க. ஆத்துலேயும் தண்ணி திமு திமுத்துப் போகுது.

இரு : செத்தாண்டா. . . . நம்மளே எதித்தவன் உரு படியாவானு. . . . வாங்க போகலாம்.

மா : நான் எதுக்குடா நானிங்கே தானே நின்னுக்கிட்டு யா ரும் வராமெ பாத்துக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் போங்க.

(போகிறார்கள்)

## காட்சி 18

இடம் : காடு.

நிலே : உபாத்தியாயர் சென்றுகொண்டிருச்க, காத்தானும், இருளனும் பின்புறமாக வந்து கட்டிப் பிடித்துத் தூக்கிச் செல்கின்றனர்.

## காட்சி 19.

இடம் தெரு.

நிலே : மாமுண்டி வர, எதிரே காத்தானும், இருள னும் வருகின்றனர்.

மாமு : என்னடா நாசொன்னபடி செய்திட்டுங்களா ?

**காத் :** ஓ நீங்க சொன்னபடியே அவனே மடக்கி, கட்டி உருட்டி தண்ணியிலே தூக்கி எறிஞ்சிட்டோம்.

**மாமு :** தொலேஞ்சான் முதல் எதிரி.

**காத் :** அடுத்தாப்பிலே.

**மாமு :** அதை அப்புறம் பாத்துக்குவோம்.

**காத் :** அப்ப எங்களுக்கு. (கையை சுண்டிகாமிக்கிருன்).

**மாமு :** அவன் உயிரு போயிருக்காது போலிருக்கு அதுக்குள்ளே என் உயிரை வாங்கிறியடா—போங்கடா.

## காட்சி 20

**இடம் :** வைத்திலிங்கம் வீடு.

**நிலே :** வைத்திலிங்கம் எழுதிக் கொண்டிக்கும் பொழுது, தனம் வருகிருள்.

**வை :** வா. . . ங்க. . .

**தன :** ஆமா. . . அப்பா எங்காவது ஊருக்குப் போகிறேனென்று சொன்ஞர்களா.

**வை :** இல்லேயே. . . .

**தன :** எங்கே போயிருப்பார் ?

**வை :** ஊரில் இல்லேயா.

**தன :** நேற்றுச் சாயங்காலத்திலிருந்து காணவில்லே.

**வை :** ஊருக்குப் போனல் உங்களிடம் சொல்லிக் கொண்டு போகமாட்டாரா.

**தன :** உடனே திரும்பி விடுவதாயிருந்தால் சொல்லாமலும் போவார். தங்குவதாயிருந்தால் சொல்லாமல் போனதில்லே.

**வை :** எங்கோ ஊருக்குத்தான் போயிருக்கவேண்டும். . . . சொல்லிப் போக சந்தர்ப்ப மில்லாமலிருந்திருக்கலாம்.

**தன :** அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஒரு சமயம் உங்களுக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்கத்தான் வந்தேன்.

**வை :** உட்காருங்கள் நின்றுக் கொண்டிருக்கிறீர்களே.

**தன :** காவேரி எங்கே ?

**வை :** எங்காவது வெளியில் போயிருக்கும்.

**தன :** இப்பொழுதான் போச்சா.

**வை :** ஆமா. . . காவேரி தையல் வேலை எப்படிச் செய்கிறது.

**தன :** பெரும்பாலும் கற்றுக் கொண்டு விட்டாள். ஆமா . . . நான் கொடுத்த புத்தகங்களை படித்து விட்டீர்களா.

**வை :** இன்னும் ஒரு புத்தகம் பாக்கியிருக்கிறது.

**தன :** நீங்கள் அந்த காண்டேகர் எழுதிய நாவலைப் படித்தீர்களா.

**வை :** ஓ ! . . . . அதில் பெண்களை நடமாடும் தெய்வங்கள் என்று மிகவும் பொருத்தமாகத்தான் கருத்துக்களை வெளியிடுகின்றார்.

**தன :** நீங்கள் இப்பொழுது ரொம்பவும் முன்னேறி விட்டீர்கள்.

**வை :** அப்படி நான் முன்னேறியிருந்தால் அதற்கு என் சொந்தப் பொறுப்பு மாத்திரம் காரணமில்லை. அந்த முன்னேற்றத்திற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று ஐந்தாண்டுத்திட்ட நடைமுறை. மற்றொன்று உங்கள் தந்தையும் என் ஆசிரியருமான, மேதையின் போதனை.

**தன :** உங்களுடைய ஆச்சரியமான வளர்ச்சியைக் கண்டு. . மற்றவர்கள். . . .

**வை :** ஆச்சரியப்படுகிறார்கள், பொறுமையும் கொள்கிறார்கள்.

**தன :** இதையும் தெரிந்துதான் வைத்திருக்கிறீர்கள். . . ஆமாம். . . . . .காவேரி எங்கே இன்னும் காணவில்லை ?. . . . . தோட்டத்தைக் காட்டுகிறேனென்று சொல்லி இருந்தாள்.

**வை :** வாருங்கள். நானே காட்டுகிறேன். உங்களுக்கு தோட்டமென்றால் ரொம்பப் பிரியமோ.

**தன :** ஆமாம். . . .

## காட்சி 21

**இடம் :** தோட்டம்.

**நிலை :** வைத்திலிங்கம் தோட்டத்தை தனத்திற்குக் காட்டிக் கொண்டிருத்தல்.

**தன :** தக்காளி குண்டு குண்டா காய்த்திருக்கிறதே !

**வை :** ஒரு கவிஞர்கூடச் சொல்கிறார். . . .

**தன :** என்ன சொல்கிறார் ?

**வை :** தக்காளிப் பழத்தைச் சிரிக்கும், பெண்களின் கன்னங்களுக்கு உவமை காட்டுகிறார்.

**தன :** அடேடே. . அப்புறம் ஏதாவது சொல்லி இருக்கிறாரா.

**வை :** வெண்டக்காயை பெண்களின் உள்ளத்திற்கு உதாரணமாக எழுதுகிறார்.

**தன :** உடலுக்கு மிகவும் நல்லதாயிற்றே தக்காளியும் வெண்டையும்.

**வை :** அதையும் சொல்லாமலில்லை அவர்.

**தன :** நன்றாகச் சாப்பிட்டு அனுபவித்தவராயிருக்கலாம் கவிஞர்.

**வை :** கருணைக் கிழங்கை, பெண்களின் கண்டிப்பான ஆலோசனைகளுக்கும், தேங்காயை கோபத்தைச் சாந்தம் படுத்தும் குணத்திற்கும். . . . ஒப்பிடுகிறார்.

**தன :** நல்ல கவிஞராயிருக்கிறாரே. ஆமாம். இந்தக் கருகிப் போன மலருக்கு ஒன்றும் சொல்லவில்லையா.

**வை :** இல்லை. ஆனால். நான் வேண்டுமானால் சொல்கிறேன்.

**தன :** எங்கே சொல்லுங்கள்.

**வை :** மதுரத்தோடு, மனத்தை அள்ளி வீசிக் கொண்டு மலர்ந்த அந்த மலர்கள். . . . ஹும். . . (மௌனம்)

**தன :** ஏன் நிறுத்திவிட்டீர்கள். . . .

**வை :** கருகிவிட்டன. . . . . .

**தன :** எதைப்போல் ! . . . .

**வை :** இன்பத்தோடு பொங்கி எழுந்த ஆசை, அதன் இலக்கை அடையாமல், பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தீண்டியதுபோல்.

**தன :** ஹூம். . . .

**வை :** தவருகச் சொல்லி விட்டேனு.

**தன :** இல்லை.

**வை :** இல்லை. . . தவறுதான். செடி கருகாமலிருக்கும் வரை மலர்கள் கருகியதால் தீமையொன்றும் வந்து விடவில்லையே. செடிகள் மறுபடியும் பூக்காமலா போகும். செடிகள் உயிருடன் இருக்கும் வரை அதற்கு வாழ்க்கையும் உண்டுதானே.

**தன :** வாழ்க்கையா. . . .

**வை :** ஆம் ! . . .

**தன :** நீங்கள்.

**வை :** நீங்கள் நினைப்பதைப்பற்றித்தான் நானும் பேசுகிறேன். மக்கள் மாசற்ற மறு வாழ்வு பெறத் துணிந்தால்தான் சமுதாயம் வளர முடியும்.

**தன :** அடேயப்பா. . . . நீங்கள் மிகவும். . . .

**வை :** மாறிவிட்டேனென்று சொல்லப் போகிறீர்கள். மாறுதலடைவது இயற்கையின் பண்புதானே. மாறுதலில்லா விட்டால் மரங்களிலும் குகைகளிலும் வாழ்ந்து வந்த மனித சமுதாயம் குடிசைகளிலும் கூட மாடங்களிலும் வாழ முடியுமா ?

**தன :** நீங்கள் பெரிய நாடகங்கள்கூட எழுதலாமே. . .

**வை :** எழுதிக்கொண்டுதானே இருக்கிறேன்.

**தன :** என்னிடம் காட்டவில்லையே !

**வை :** முழுதும் எழுதிய பின் காட்டுகிறேன்.

**தனம் :** எழுதியவரை இருப்பதைப் பார்க்கக்கூடாதா ?

**வை :** என் அவசரம், நாஞென்று நினைத்து எழுதியிருப் பேன். நீங்கள் வேறு விதமாக யூகித்தால். . .

**தனம் :** என் யூகம் இது வரை பொய்த்ததில்லே. இனியும் பொய்க்காது.

**வை :** அப்படியாஞல் நீங்கள் சரியாக யூகிப்பீர்களென்று நம்புகிறேன்.

**தனம் :** உங்கள் நம்பிக்கை வீண் போகாமல் பார்த்துக் கொள்கிறேன்.

**வை :** மிகவும் நன்றி! . . .

## காட்சி 22

**இடம் :** மாமுண்டி அம்பலத்தின் களம்.

**நிலே :** வைக்கோல் போரில் தீ எரிகிறது.

**கூட்டம் 1 :** அதோ நெருப்பு !....மாமுண்டியம்பலம் களத்து வீட்டிலே....ஓடுங்கள்....வாங்க....வாங்க.

**வைத்திலிங்கம் :** அடாடா....பாவமே ! மாமுண்டியம்ப லம் களத்து வீடில்லெ எரியிது. (ஓடுகிருன்.... தனம் எதிரே வருகிருன்.)

**தனம் :** நில்லுங்கள் ! எங்கே போகிறீர்கள்.

**வைத்தி :** நெருப்பு....அதோ !....அநியாயமாய் பிடித்து எரிகிறது.

**தனம் :** ஆமாம். எரியத்தான் செய்கிறது. அநியாயமும் பொருமையும் கொழுந்து விட்டெரிகிறது. நீங்கள் போக வேண்டாம் !

**வைத்தி :** தனம் !....நீங்கள்தாஞ இப்படிப் பேசுவது. ஆபத்தில் மனஸ்தாபத்தைப் பாராட்டலாமா !.... அவன் பொருமைக்காரஞயிருப்பதற்காக நாம் கடமை தவறுவதா.

**தனம் :** நீங்கள் உண்மை தெரியாமல் பேசுகிறீர்கள். மாமுண்டியம்பலம் தனக்குத்தானே வைத்துக் கொண்ட கொள்ளியது ! அவன் வினை அவனையே சுடுகிறது.

**வைத்தி :** என்ன நீங்கள் சொல்கிறீர்கள். புதிராயிருக்கிறதே.

**தனம் :** புதிரொன்றுமில்லை. உங்களை அந்த நெருப்பில் தள்ளுவதற்காகச் செய்த சூழ்ச்சிதான் இது ! நீங்கள் தீயை அணைக்க வரும்பொழுது அதிலே தள்ளிவிட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்றார்களாம்.

**வைத்தி :** ஹா ! இது எப்படி உங்களுக்குத் தெரியும்.

**தனம் :** துன்மார்க்கச் செயலிலே ஈடுபட்டிருக்கும் கூட்டத்தில் ஒருவனான இருளப்பன் மனைவி, என்னிடம் தையல் கற்றுக்கொள்கிறாள். அவள்தான் சொன்னாள். இதை யாரிடமும் சொல்லிவிட வேண்டாமென்று காலில் விழுந்து கெஞ்சிக்கேட்டுக்கொண்டாள். அத்துடன் சில நாட்களுக்கு முன்பு இருளப்பன் ஏதோ செய்துவிட்டு வந்து, வீட்டிலே பதறிக்கொண்டிருந்தானாம். அது என்னவென்று சரியாகத் தெரியவில்லையென்றும் சொன்னாள். பாவம் ! அவள் எவ்வளவோ சொல்லியும் அவன் கட்டுக்கடங்கவில்லையாம்.

**வைத்தி :** என்ன அநியாயமிது !....ஹும்....சேச்சே.... இந்தப் பொறாமைக்காரர்கள் மத்தியில் இந்தக் கிராமம் எப்படி முன்னேறப் போகிறது.

**தனம் :** எல்லாம் இந்தக் காரியதரிசி வேலையில் வந்த வினை.

**வைத்தி :** ஹும்....என் நான் இதை ராஜிநாமா செய்துவிட்டாலென்ன.

**தனம் :** முள்ளுக்கஞ்சி வழியில் நடக்கப் பயப்படலாமா.

**வைத்தி :** நல்லது கெட்டது தெரியாதவர்களிடம் எப்படி வாழ்வது.

**தனம் :** அப்படிப் பார்த்தால், உலகத்திலேயே நீங்கள் நினைப்பது போன்ற தூய்மையான இடம் எங்குமே இல்லை. இதெல்லாம் வீண் புரளி ! பொறுப்புடனும் சகிப்புடனும் வாழப் பழகிக்கொண்டால், எந்த எதிர்ப்பும் சகஜமாகிவிடும்.

**வைத்தி :** அதிருக்கட்டும் ....அப்பா விஷயம் ஒன்றும் தெரியவில்லையே.

**தனம் :** ஒரு வேளை இந்தப் பொறாமைக்காரர்கள் அவருக்கும் தீங்கு செய்திருப்பார்களோ என அஞ்சவேண்டியிருக்கிறது.

**வைத்தி :** யோசிக்கவேண்டிய விஷயந்தான்.

**தனம் :** எதற்கும் போலீஸில் புகார் செய்வதுதான் நல்லது.

## காட்சி 23

**இடம் :** மாமுண்டி அம்பலம் வீடு.

**நிலை :** சப்-இன்ஸ்பெக்டர் விசாரணை.

**சப்-இன்ஸ்பெக்டர் :** மாமுண்டியம்பலம். இதுதானே உங்கள் வீடு.

**மாமுண்டி :** ஆமாங்க. அந்தா...தெரியிது பாருங்க ! அதுதாங்க களம். அங்கேதான் தீ....

**சப்-இன் :** ஆமா ஆமா அது தெரியும். நான் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். ஆமா....நீங்க நெருப்புப் பிடிக்கிற சமயம் எங்கே போயிருந்தீர்கள்.

**மாமு :** வீட்லேதாங்கே இருந்தேன்.

**சப்-இன் :** வீட்லேன்னு........இந்த இடத்தில்தானே உட்கார்ந்திருந்தீர்கள்.

**மாமு :** ஆமாங்க.

**சப்-இன் :** நெருப்பு எரிய ஆரம்பிக்கும் பொழுதே நீங்க பார்த்தீங்கல்ல.

**மாமு :** நல்லாப் பாத்தேங்கே :

**சப்-இன் :** (எழுதிக்கொண்டு) மாமுண்டியம்பலம் நீங்கள் கொஞ்சம் தனியாக உள்ளே வரவேண்டும். (உள்ளே சென்று) உங்களுக்கு யார் மேலாவது சந்தேகமிருகிறதா.

**மாமு :** இருக்குங்க, வைத்திலிங்கமின்னு ஒருத்தனிருக்கான்....

**சப்-இன் :** உங்களுக்கு எதிரியா அவர்.

**மாமு :** ஏங் கேக்கிறீங்க. அவனுக்குக் கொஞ்சம் சனக்கட்டு அதிகம். அதை வச்சுக்கிட்டு ரொம்பப் பேரு குடியைக் கெடுத்துப்பிட்டாங்க.

**சப்-இன் :** எப்படி ?

**மாமு :** சர்க்கார் விவசாயக் கடன் கொடுத்து உதவுராங் கல்லெ. அதை இவனே நின்னு வாங்கிக் குடுக்கி றேன்னு விவசாயிங்க வயித்திலே மண்ணே அடிச் சிட்டானுங்க.

**சப்-இன் :** இதை நீங்கள் சாட்சிகளோடு பிடித்துக்கொடுக்க முடியுமா ?

**மாமு :** அது....இப்ப....எப்பிடிங்க முடியும்....ரொம்ப நாளாச்சு.

**சப்-இன் :** சரி, மேலே சொல்லுங்கள்.

**மாமு :** நானும் சர்க்கார் கடனுக்கு மனுப்போட்டேங்க. இவனிதிலே பங்கு கேட்டான். கொடுக்கமாட்டேன் னே. அதுக்காக என்னென்னமோ செஞ்சு கடனே கெடைக்காமல் பண்ணிட்டாங்க. என்னமோ நம்ம விதியின்னு சும்மாயிருந்தேன். ஒரு நாள் மாட்டுக்கு வைக்கல் வேணும் ரெண்டு கட்டு கொடுன்னு கேட் டான். வாங்கிறு பணங்கொடுக்க மாட்டானிங்கிறது எனக்குத் தெரியும். வைக்கல் இல்லேன்னுட்டேன். “ ஹும் இல்லையா இன்னம் ஒருவாரத்திலே பாரு ஒன் வைக்கல் போரே இல்லாமெ செஞ்சுபிடுரேன்னுட்டுப் போனன் ” நானும் என்ன செஞ்சு பிடுவான்னுட்டு மெதமாயிருந்திட்டேன். இப்ப ஒரு போரு வைக்கலும் போச்சு.

**சப-இன் :** ஆமா. நீங்க தீ எரிய ஆரம்பித்ததுமே என் அணைத்திருக்கக்கூடாது. ப்க்கத்தில் தண்ணீர் வசதி கூட இருந்திருக்கிறதே.

**மாமு :** பாதிப் போரு எரிஞ்சப்பத்தானே பார்த்தேன். முதல்லே தெரிஞ்சா இம்பிட்டு ஆயிருக்குங்களா.

**சப்-இன் :** சற்று முன்னல் சொன்னீர்களே தீ எரிய ஆரம் பித்ததுமே பார்த்தேனென்று.

**மாமு :** இல்லீங்களே.....ம....மம்....மறதியா....பதட்டத்திலே....

**சப்-இன் :** அது தானே கேட்டேன். ஆமா வைத்திலிங்கம் தீ வைக்கும்பொழுது நீங்கள் பார்க்கவில்லையே.

**மாமு :** இல்லீங்க அவம்மாதிரி யாரோ ஓடினுப்பிலே தெரிஞ்சிச்சு.

**சப்-இன் :** தீ வைத்துவிட்டு ஓடியதைப் பார்த்தீர்கள். அது வைத்திலிங்கம் மாதிரி தெரிந்தது. அப்படித் தானே.

**மாமு :** ஆமாங்க.

**சப்-இன் :** சரி ஓடும்பொழுது நீங்கள் ஏன் பிடித்திருக்கக் கூடாது.

**மாமு :** தீயைப் பார்க்கிறதா....இவனைப் பார்க்கிறதா....

**சப்-இன் :** அப்ப....தீயை வைத்து பாதிப்போர் எரியும் வரையும் அங்கே நின்றுபார்த்துவிட்டு ஓடியிருக்கிறான். நீங்கள் பாதிப்போர் எரியும்பொழுது தானே பார்த்திருக்கிறீர்கள்.

**மாமு :** ஆமா அப்படித்தாங்க.

**சப்-இன் :** சற்று முன்னால் தீயைவைத்தவுடனேயே ஓடி விட்டதாகச் சொன்னீர்களே.

**மாமு :** ஹும்....(விழிக்கின்றான்).

**சப்-இன் :** என்னய்யா ஏன் பேசவில்லை ?

**மாமு :** பதட்டத்திலே அப்படிச் சொன்னேனோ என்னமோ ....ஒங்களைப் பார்த்த ஒடனே....ரொம்ப....

**சப்-இன் :** பீதியாப்போச்சு....அதுதான் பதட்டம்....ஹும் ....சரி....நான் வருகிறேன். மாமுண்டியம் பலம், அவசியமேற்பட்டால் கூப்பிடுகிறேன். (போகிறார்).

## காட்சி 24

**இடம் :** தெரு.

**நிலை :** ஸப்-இன்ஸ்பெக்டர் கான்ஸ்டேபில்களுடன் வருகிறார்.

**சப்-இன்ஸ்பெக்டர் :** செவன் எயிட்டீன் ! ....நாம் நினைத்ததைப்போல்தான் இந்தக் கேசுமிருக்கிறது....நான் சொல்லியபடி எட்டிடம் சொன்னையா.

**செவன் எயிட்டீன் :** ஆமாங்க. புதிசா ட்ரான்ஸுர் ஆகி வந்திருக்கிற இரண்டு போலீசையும் மப்டியிலே வாச் பண்ண சொல்லியிருக்காருங்க. ஒருத்தர் மாமுண்டியம்பலத்தையும் இன்னொருத்தர வைத்திலிங்கத்தையும் வாட்ச் பண்ணுவாங்க. நீங்க மாமுண்டியம்பலத்தை விசாரிக்கிறப்பவே மப்டியிலே வாச் பண்ணிக்கிட்டுத்தாங்க இருந்தாங்க. (ஹெட்கான்ஸ்டேபில் வருகிறார்.)

**ஹெட்கான்ஸ்டேபில் :** (சல்யூட் செய்தபின்) நெருப்புக் கேசுக்கும் உபாத்தியாயர் காணுமல் போனதற்கும் சம்பந்தமிருக்குமென்றுதான் தெரிகிறது.

**சப்-இன் :** யெஸ் (யோசித்தபின்)....ஹும்....எதிரிகளை எதிரிகளாகவே நடத்தக்கூடாது. தக்க சமயத்தில் அமுக்கவேண்டும்.

## காட்சி 25

**இடம் :** தனத்தின் வீடு.

**நிலை :** தனமும் வைத்திலிங்கமும் சம்பாஷணை.

**வைத்திலிங்கம் :** சப்-இன்ஸ்பெக்டர் மிகவும் சுறு சுறுப்பானவர். கூடிய விரைவில் கண்டு பிடித்து விடுவதாகச் சொன்னார்.

**தனம் :** ஆமாம். எஸ்.ஐ. ஒரு ஹரிஜன் என்பது உண்மையா.

**வைத்தி :** ஆமாம். ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தகப்பனர் இன்னும் விடாமல் தோட்டி வேலை செய்து வருகிறார். ஹரிஜன் என்று அவர்களை மதியாத

நிலை மாறிக் கொண்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் அவர்கள் நலனைப் பெரிதும் கவனிக்கிறது. அவர்களுக்கு இலவசமான படிப்பு, வைத்தியம், வீடு, சமத்துவ போஷணை, அதிகப்படியான உத்தியோகங்கள், இந்த அடிப்படையில் அவர்களின் நலனை மிக அக்கறையோடு கவனிக்கின்றது நமது சுதந்திர சர்க்கார்.

**தனம் :** "பறையருக்கும் இங்கு தீயர்புலையருக்கும் விடுதலை" யென்று அன்று முழங்கிய பாரதியின் குரல், இன்று எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது பார்த்தீர்களா!

**வைத்தி :** நமது கிராமத்தைப் பார்த்தாலே தெரியுமே. அவர்களுக்குக் கட்டிக்கொடுத்த வீடுகளையும் அவர்கள் சுகாதாரமான முறையில் அதைப் பேணுவதையும், கைராட்டை சுற்றல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், படித்தல், இவைகளில் இவர்கள் காட்டும் ஆர்வத்தைக் காணும் பொழுது . .

**டாக்டர் :** வணக்கம் வணக்கம் . . ஹும் உபாத்தியாயரைப் பற்றி இன்னும் தகவல் கிடைக்கவில்லையா?

**வைத்தி :** இல்லேங்க.

**தனம் :** நீங்கள் ஆறு மாதமாகப் பட்டணத்திலேயே தங்கி விட்டீர்களோ ?

**டாக் :** ஆம். பட்டணத்திலிருந்து இங்கு வந்தபொழுது தான் நமது கிராமத்தின் "மௌனப்புரட்சி" எனக்குப் புலனானது . . ஆமாம் . . வைத்திலிங்கம்! . . உங்கள் மைத்துனன் மன்னார்சாமி . .

**வைத்தி :** ஏதாவது தகவல் கிடைத்ததா ?

**டாக் :** நேரிலேயே பார்த்தேன்.

**வைத்தி :** எங்கே ? என்ன செய்து கொண்டிருக்கின்றான் !

**டாக் :** இந்நேரம் காவேரியிடம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருப்பான்.

**வைத்தி :** வந்து விட்டானு !

**தனம் :** வீட்டிலேயே பேசிக்கொண்டிருக்கின்றுர்.

**டாக்:** ஆமாம். பக்ரா நங்கல் அணையிலே வேலை செய்கிருனும்.

**வைத்தி :** அடே . . மன்னுரா ! ஹும் அப்புறம் . .

**டாக் :** இப்பொழுது ஆள் மிகவும் மாறி விட்டான். நிதான மாகவும் பொறுப்புடனும் பேசுகிருன். தான் செய்த தவறெல்லாம் ஒரு நன்மையைச் செய்து விட்டது என் றும் பெருமைப்படுகிருன். ஒரு வார லீவில் உங்களை யெல்லாம் பார்க்கவேண்டுமென்று ஓடிவந்திருக் கின்றுன். எலக்ட்ரிக் வேலையும் பழகிக் கொண்டு வருகிருனும்.

**தனம்:** அடே. . . . நம்ம கிராமத்திற்கு மின்சார வசதி செய்யும் பொழுது மிகவும் உதவியாக விருக்கும்.

**டாக் :** இப்பொழுது மின்சார உற்பத்தி நிலையத்தில் வேலை செய்கிருன். . . . பிறகு அதை விநியோகிக்கவும் கற்றுக் கொள்வான்.

**வைத்தி :** பக்ரா நங்கல் போன்ற மாபெரும் திருப்பணியை நாம் நேரில் பார்க்க இன்னும் கொடுத்து வைக்க வில்லை. மன்னுர் எல்லாம் பார்த்து விட்டான்.

**தனம் :** நமது மாகாணத்தின் திட்டச் செலவில், நான்கில் ஒரு பாகம் நீர்ப்பாசன வசதிக்கு செலவு செய்யப் பட்டிருக்கிறது. பெரும் அணைக்கட்டுகள் மூலம் மாத்தி ரம் சுமார் 220,000 எக்கரா நிலங்கள் சாகுபடி யாகும். கீழ் பவானித் திட்டம், மணிமுத்தாறுத் திட்டம், மேட்டூர் கால்வாய்கள் திட்டம், காவேரி கழி முகப்பிரதேச வடிகால் திட்டங்கள், ஆரணியாறுத் திட்டம் இன்னும் எத்தனையோ சிறு சிறு வடிகால் திட்டங்கள்.

**வைத்தி :** எவ்வளவு பிரம்மாண்டமான சாதனைகள் ! பெரும் அணைகள் மூலம் மிகவும் அதிகமான மின்சாரமும் உற்பத்தியாகும் . . வளர்ச்சிக்குரிய இந்த நாளில் வாழும் நாம் பெரும் பாக்யசாலிகள்தான். நம் ஒவ்வொருவரின் உழைப்பும் சரித்திரப் புகழ் வாய்ந்த சின்னங்களை நிலை நிறுத்துகிறது என்று நினைக்கும் பொழுது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியில் சற்று கர்வங்கூடக் கொள்ளச் செய்கிறது.

**டாக் :** முற்றிலும் உண்மை! இது மாத்திரமா கன ரக இயந்திர உற்பத்தியை நினைத்தால், நாம் இமயத்தின் உச்சியிலேயே உலாவுவதாக நினைப்பேற்படுகிறது.

**வைத்தி :** "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம். ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்" என்றாரே நமது அமரகவி....

**தனம் :** அவர் முக்காலமே உணர்ந்த மகா தீர்க்கதரிசி அந்தத் தேசீய மகாமேதை பாடிய பாட்டுக்களெல்லாம் நமது ஐந்தாண்டுத் திட்டத்திலே உயிர் பெற்று வளர்கிறது. (இந்தச் சமயத்தில் கிராமத்தான் ஒருவன் வருகின்றான்.)

**வைத்தி :** என்னய்யா....என்ன வேண்டும்.

**கிராமத்தார் :** வைத்தியலிங்கமிங்கிறது யாருங்க ?

**வைத்தி :** ஏன் நான் தான் என்ன வேண்டும்.

**கிரா :** உள்ளதைச் சொல்லுங்கையா சும்மா அலச்சக்காட்டாமெ . . கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி . . நெருப்புப் புடுச்சு எரிஞ்சுச்சே அந்த வூட்டுக்காரரும், நான்தான் வைத்திலிங்க மிங்கிறது என்ன விஷய மின்னு கேட்டாரு . . சொன்னேன். பிற்பாடு என்னடான்னு அவரு இல்லையின்னு ஒரு நல்ல மனுசன் சொன்னாரு. இந்த வூரிலே எல்லாரும் இப்படித்தான் இருக்காங்களா . . சேச்சே.

**வைத்தி :** நீங்கள் யாரு. எந்த ஊரு . . . .

**கிரா :** சாலூருங்க. எம்பேரு வீரன்.

**தனம் :** மாமுண்டியம்பலத்தைத்தான் முதலில் சந்தித்திருப்பேபோலிருக்கிறது. ஆமாம்...என்ன விஷயம்.

**கிரா :** ஏம்மா உள்ளதைச் சொல்லுங்க, யாரு வைத்திலிங்கம். முக்கியமான விஷயம், ரொம்ப அவசரம். . .

**டாக் :** இந்தாப்பா . . . சந்தேகப்படாதே அவர்தான் வைத்திலிங்கம்.

**கிரா :** இந்த வூருங்களாம் அவரு.... வாத்தியாராம்....

**தனம் :** ஹாம்! அப்பாவா! என்ன எங்கேயிருக்கிறார் !

**கிரா :** எங்கவூர்லே இருக்காருங்க. ஜன்னிகண்டு ரொம்ப அவஸ்தைப் படுகிருருங்க. சில நேரங்கள்லே.... ஒன்னுமே . . . .

**தனம் :** ஜன்னியா ! . . . .

**கிரா :** ஆத்திலே யாரோ தூக்கி எரிஞ்சு விட்டாங்களாம். எப்படியோ சாமிதான் காப்பாத்தியிருக்கு. எங்க ஊரு மண்டபத்திலே படுத்திருந்தாரு......இப்ப ஊர்ச்சாவடியிலே எங்க ஊர்க்காரர்ங்க தூக்கியாந்து போட்டிருக்காங்க. நேத்திக்கு என்னமோ கடுதாசி கொண்டாரச் சொல்லி எழுதச் சொன்னுருங்க. எழுதின கடுதாசியை எங்க கர்ணத்தையாக்கிட்ட கொடுத்திருக்காரு. அதுக்கப்புறம் கண்ணைத் தொரக்கலிங்க.... ஒரே பொலப்பந்தாங்க.

**வைத்த :** என்ன சோதனையாயிருக்கிறது.

**டாக் :** ஜன்னி! வைத்திலிங்கம்! நான் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு சீக்கிரம் வந்து விடுகிறேன். நாம் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!

**தனம் :** இங்கேயிருந்து எந்த வழியாகப் போக முடியும்?

**கிரா :** குறுக்குப்பாதையிலே போகமுடியாதுங்க, தண்ணியும் கிண்ணியிமாயிருக்கு கொஞ்சம் சுத்திப் போனு நல்ல ரோட்டுப் பாதைங்க. இப்பத்தான் ரோடு போட்டோம். வண்டியிலே சட்டுனு போயிடலாம்.

## காட்சி 2

**இடம் :** மாமுண்டியம்பலம் வீடு.

**நிலே :** துடிப்புடன் அவசரமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

**மாமுண்டியம்பலம் :** நெருப்பிலே தள்ளிப்பிடலா மின்னு நினைச்சம். தப்பிச்சிட்டான். இப்ப அந்த வாத்திபய வேரே பொழைச்சு வந்தான்னு நம்ம கம்பியை எண்ண வேண்டியதுதான்.

**காத்தான் :** எப்பப்பாத்தாலும் இந்த ஐந்தாண்டுத் திட்ட முன்னுபேசிர பய நம்மக்கிட்டேயிருந்து எப்படியும் தப்பிச்சிக்கிருனே. இப்ப அந்த வாத்தியை என்ன பண்றது.

**மாமு :** இன்னமே யோசிச்சா ஒண்ணும் நடக்காது. அவனே இங்கே வரவிடப்படாது.

**இரு :** அதுக்கு என்ன பண்றது.

**மாமு :** அவனேயும் சரிக்கட்ட வேண்டியதுதான்.

**இரு :** என்னங்க.

**மாமு :** நாம சீக்கிரமா அந்த ஊருக்குப் போயி ஆனெ வேலேயை முடிச்சாத்தான் பொழைச்சோம். இல்லாட்டி ஒங்க ரெண்டுபேரையும் சரியா மாட்டி வச்சிடுவேன்.

**காந் :** ஆம சனியன் நாங்கதானே ஆத்திலே தூக்கிப்போட்டது . . .

**இரு :** இனிமே என்ன. நடந்தது நடந்திடுச்சு. ஒருகை பாத்துப்பிடுவோம்.

**மாமு :** சபாஸ்டா பாண்டியா....பொறப்படுங்க இப்பவே..

**காத் :** நீங்களும் வாங்க!

**மாமு :** நானுமா . . . ஹும் . . . சரி வாங்க! . . ஆனு அச்சிலேவாக்கிறது ஆகாட்டி மொடாவிலே வாக்கிறது! . . . . !

## காட்சி 27

**இடம் :** சாலூர் கிராமம்.

**நிலே :** சாவடிக்கூட்டத்தில் துணியால் போத்தப்பட்டு உபாத்தியாயர் படுத்திருக்கிருர்.

**மாமு :** காத்தா. (ரகஸியமாக) நம்ம நல்ல காலந்தாண்டா இன்னேக்கி இந்த வூரு கண்மாய் ஒடைப்புக் கண்டிருக்கு.

**காத் :** ஆமங்க. ஜனங்கல்லாம் கண்மாய்க்கு கரை போடப் போயிருக்காங்கள்.... அதோ ரெண்டொருத்த திரியிராங்களே.

**இரு :** உஸ், . சத்தம் போடாதே! திரிஞ்சர்த்திரியட்டும் . . (மூவரும், உபாயத்தியாயர் படுத்திருக்கும் கட்டிலே யணுகி போர்வையை மெதுவாக முகத்தில் மாத்திரம் நீக்குகிறுர்கள்.)

**மாமு :** நல்ல தூக்கம் ! . . . தூக்குங்க கட்டிலே! . . . (தூக்கியவாறு) அப்படியே அந்தக் குடிசையிலே போட்டு நெருப்பை வை! . . .
(குடிசைக்குள் போட்டு நெருப்பை வைக்கின்றனர்.) இது சமயம் வைத்திலிங்கம் முதலானோர் ஓடி வருகின்றனர். இவர்களே கண்டவுடன் அறிவாளைக் காட்டியபடி குடிசையை வளைத்து நின்றனர் மாமுண்டி கோஷ்டி.

**டாக் :** ஆளை உள்ளே வைத்துத்தான் நெருப்பை வைக்கிறுர்கள் போலிருக்கு வாரும்ங்ள் சீக்கிரம்!

**வைத்தி :** மன்னுரு எடு கம்பை! ஓடு விடாதே! ஹும்

**தனம் :** அய்யய்யோ அப்பா! அப்பா . .

**மாமு :** டே இருளா! வெட்டுடா துணிஞ்சு! வெட்டு! ஹும்.

**மன் :** வாங்கடா கருவாட்டுக்கடைச் சிங்கங்களா வாங்கடா இன்னைக்கித்தாண்டா தெரிஞ்சிக்கப்போறீங்க! . . மச்சான் நீபோயி கூறையைப் பிரி! . . . (போலீஸார் துப்பாக்கியைக் நீட்டியவாறு ஓடி வருகின்றனர்.)

**சப்-இன் :** டே! டே! . . . ஓடாதே சுட்டுவிடுவேன் நில் அங்கே! . . . போடு அரிவாளைக் கீழே! போடுடா கீழே! (இதற்குள் குடிசையிலிருந்து உபாத்தியாயரைக் கட்டிலுடன் வெளியே தூக்கி வருகின்றுர்கள். இந்தச் சந்தடியில் கண்மாயிலிருந்து மக்கள் திரண்டு வந்து நெருப்பை அணைக்கின்றனர்).

**கிரா 1 :** அட அநியாயமே! அங்கே பாத்தா வெள்ளம்! அதுக்கு உசிரைக் குடுத்துக்கிட்டு இருக்கப்போ இங்கே தீயா !

**கிரா 2 :** யாரவன் தீயை வச்சது ஓடிங்க மணிக்கட்டை.

**சப்-இன் :** அமைதி . . சப்தம் போடாதீர்கள். டாக்டர்! உபாத்தியாயரைக் கவனியுங்கள்.

**சிராம :** அவரை எதுக்குங்க பாக்கிறீங்க அவரு மத்தியானமே செத்திட்டாருங்க.

**தனம் :** அய்யய்யோ! . . அப்பா! அப்பா!! அப். . பா! . . . இனிமேல் உங்களை எங்கே காணப்போகிறேன். அனாதையாக முன் பின் தெரியாத இடத்திலா சாக வேண்டும் . . அய்யய்யோ! . . .

**வைத்தி :** (விம்மியாவறு) பெற்ற தந்தையைக் காட்டிலும் . . கண்ணைப்போல் காத்து வந்த கருணாமூர்த்தி பிரிந்து விட்டார். முன்னேற்றம் முன்னேற்ற மென்று, மூச்சுக்கு மூச்சு சொல்லி வந்த ஜோதி மறைந்து விட்டது! . . இந்தக் கொடுமையைக் காணவா ஓடி வந்தோம் . .

**டாக் :** எதிர்பார்த்தபடி எதுதான் நடக்கிறது.

**கிரா கர்ணம் :** மூன்று நான்கு நாட்களாக மிகவும் சிரமப் பட்டார். இன்று காலை ஓர் கடிதம் எழுதச் சொல்லி. அதில் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்தார், வைத்திலிங்கம் என்பவரிடம் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டார்.

**வைத் :** எங்கே யந்தக் கடிதம்!

**கிரா கர்ணம் :** வீட்டிலிருக்கின்றது எடுத்து வருகிறேன் (போகிறார்).

**டாக் :** (கிராமத்தினரைப் பார்த்து) ஏய்யா இந்தப் பக்கத்திலே ஒரு ஆஸ்பத்திரி யில்லையா.

**கிரா :** பக்கத்து கிராமத்திலே இப்பத்தாங்க தொரந்திருக்காங்க. அதுக்குத் தூக்கிக்கிட்டு போகலாமின்னு இருக்கப்பத்தான் காலையிலே இங்கே கண்மாயிலே தண்ணி வந்திடுச்சிங்களெ அதாடவும் பாருங்க அந்த ஊருக்குப் போற பாதையை வெட்டி விட்டுத்தாங்க இந்த தண்ணி வடிந்தது. இல்லாட்டி அந்த ஊருக்கே ஆபத்தா போயிருக்கும். நேத்தும் முந்தா நாளும் மழை கொட்டு கொட்டுன்னு கொட்டுச்ச. . . . என்ன பண்றது.

**சப் :** இறந்தவரை இந்தச் சாவடியில் போட்டு விட்டுத்தான் கண்மாய்க்கரைக்கு போனீர்களோ.

**கிரா :** ஆமாங்க. வேறெ என்ன பண்றது.

**சப் :** இறந்தது தெரியாமல்தான் மாமுண்டியம்பலம் நெருப்பை வைத்திருக்கிறார். ஏனையா அப்படித்தானே (மாமுண்டி தலையை அசைக்கிறான்).

**போலீஸ் :** வாயைத் தொறந்து சொல்லுமய்யா.

**மாமு :** செத்துப்போனது தெரியாதுங்க.

**கிரா :** நல்ல வேளை நீங்களும் வாராட்டி இந்த ஊரே வெந்து போயிருக்கும். நேத்து எண்ணடான்னு மழை இன்னைக்கி நெருப்பு! ஹூம் , . . (கிராமக்கர்ணம் கடிதத்தைக் கொண்டு வந்து வைத்திலிங்கத்திடம் கொடுக்கிறார்),

## காட்சி 28

**இடம் :** பாவூர் கிராம சேவா சங்கக்கூடம்.

**நிலை :** டாக்டர் தலைமையில் கூட்டம் நடை பெறுகிறது. மக்கள் திரண்டிருக்கின்றனர்.

**டாக் :** பெரியோர்களே! தாய்மார்களே! "நமது நாட்டிற்கும் சுதந்திரத்தை வாங்கித் தந்த, எம்மான் காந்தியடிகள், அந்தச் சுதந்திரத்தை பரிபூரணமாக அனுபவிக்கவும் திட்டம் வகுத்து வைத்தார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படை அம்சங்களின் ஒரு மொத்தமான வடிவந்தான், மகத்தான நமது ஐந்தாண்டுத் திட்டங்கள்" என்று அன்பு ததும்பும் குரலில், அழகாக, உணர்வோடு, அடிக்கடி நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்த ஓர் சக்தி வாய்ந்த குரல் இன்று மறைந்து விட்டது. ஆனால் அந்தக் குரலின் எதிரொலி நமது கிராமத்தில் ஆக்க வேலைகள் மூலம் பிரதி பலித்துக் கொண்டிருக்கின்றது. நம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறது! ஆவலோடு நமது திருப்பணிகளை பார்த்துக் கொண்டிருக்கிறது! ! அப்படிப்பட்ட தெளிவான குரலையுடைய நமது உபாத்தியாயர் அவர்கள் மறைந்து விட்டார்கள் என்றும், அவர்களின் அந்தக் குரல் மாத்திரம் சாகா நிலை பெற்று வாழ்கிறது!

உபாத்தியாயர் என்று சொன்னால், சகலரின் நெஞ்சிலும் அன்புருவமாக "நின்று சேவை செய்ய வாரீர்" என்றழைக்கும் அந்தப் பெருந்தகையின் திருவுருவம் குழைவோடு காட்சிதரும்!

அந்தச் சேவை செய்யும் செம்மலை, வழி காட்டியை பிரிந்திருப்பது நமக்கு நிலை கொள்ளாத் துயரத்தை ஊண்டாக்குகிறது. அப்படிப்பட்ட மேதைக்கு, நாம் நன்றியுள்ள மக்களாக நடக்க வேண்டுமானால் அவர் அடிக்கடி சொல்லும், அன்புமயமான தூய்மையான தேச சேவையை மேற்கொள்வதுதான் சிறந்தது. அதுதான் தேசாபிமான முள்ள ஒவ்வொருவரின் கடமை. தேசாபிமானந்தான் நமது உயிரினும் மேலான பண்பு! அதுதான் பெரும் புகழ் வாய்ந்த நமது கலாச்சார இலக்கியங்களை மலரவைத்தது. ஆகையால் நம்மை நாமே நமது நாட்டிற்கு அர்ப்பணித்துக் கொள்வோமாக! அடுத்தாக கிராம சேவக் அவர்கள் பேசுவார்கள்.

**கிரா சேவக் :** மறைந்த உபாத்தியாயர் அவர்கள் வேலைசெய்யும் பொழுது அதை நிர்ப்பந்தமான வேலையாக நினையாமல் சேவை செய்கிறோம் என்ற நினைவோடு தன்னை மறந்து திருப்பணி செய்வார்கள். குப்பை கூட்டுவது சாக்கடை அப்புறப்படுத்துவது வரை மேல் கீழ் என்று பாராமல் சம்பந்தப்பட்ட ஊழியர்களோடு தானும் பங்கேற்றுச் செய்து மகிழ்வார். அதனால் தான் அவரை வழிகாட்டி என்று சொல்லி மகிழ்கிறோம். பாராட்டுகிறோம், அவரின் உற்சாகமான சேவையைப் பார்த்துத்தான் எங்களுக்குக்கூட உற்சாகம் பிறந்தது என்றால் அது மிகையாகாது. அவருடைய ஒத்துழைப்பில்லாவிட்டால் இவ்வளவு குறுகிய காலத்தில் பல காரியங்களை செய்து முடிக்க முடியாது.

**டாக் :** பெரியோர்களே! அடுத்தப்படியாக ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியை நடத்தும் பேறு நமக்குக் கிடைத்திருக்கிறது. அதுவும் நமது உபாத்தியாயர் அவர்கள் தந்த பாக்கியந்தான். உபாத்தியாயர் அவர்கள் சாகு முன்னர் ஓர் கடிதம் எழுதி வைத்திருந்தார்கள், அதிலே, தமது "மகள் தனம்" வைத்திலிங்கத்தின் பொறுப்பில் வாழ்வதை விரும்புவதாக குறிப்பிட்டிருந்தார். அந்தத் தனத்தை அடையும் பாக்கியத்தை வைத்திலிங்கமும் மிகுந்த களிப்போடு பெற்றுக் கொள்ள விருக்கிறார். தனமும் தமக்கு

மறுவாழ்வு அளிக்கும் மனிதத் தெய்வத்தை, அன்புக்கரங்களால் அலங்கரிக்க ஆவலோடு காத்திருக்கிருள். இடையிலே இருக்கும் நாம், நமது மலர்ந்த உள்ளங்களை மாலைகளாகக்கட்டி அன்புப் பரிசாக வழங்குவோம்! அந்த மாலைப் பரிசின் மணம், அவர்களின் மனை வாழ்வை இன்பமயமாக்கட்டும். (வைத்திலிங்கத்தின் கையிலும் தனத்தின் கையிலும் மாலைகள் கொடுக்கப்பெறுகிறது. மலர்ந்த முகத்துடன் மாலையை மாற்றிக் கொள்கின்றனர்.)

**தனம் :** எனக்கு மறு வாழ்வு "தந்தவர்" ஐந்தாண்டுத் திட்டங்களால் உருவாக்கப்பெற்ற "மனிதர்" மனிதப் பண்பையும், வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தி, இந்த நாட்டிற்கே மகத்தான மறு வாழ்வு கொடுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களை, நாம் நிறைவேற்றுவதன் மூலம் நமது பிறவிப்பேற்றை பயனுள்ளதாகச் செய்வோமாக! மகத்தான மறுவாழ்வு மலர மாபெரும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சேவை செய்வோமாக! மகத்தான மறு வாழ்வு!

**கூட் :** மலர்க! மலர்க!!

**தன :** மகத்தான மறு வாழ்வு!!

**கூட் :** மலர்க! மலர்க!!

---

அவ்வை